



WARRANTY 2 years WARRANTY
Mahaa's Digital
Vinoth
077 9906581
No.61b,Soosaipillaiyarkulam road, Vavuniya. Tel:024 2054843 / 076 4446767
e-mail : mahaasdigital@gmail.com
"டிஜிற்றல் ... உங்கள் நண்பன்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIMAL PHOTO

## PHOTO & FULL HD VIDEO

Mannar Road, Veppankulam, vavuniya




FOR CONTACT DETAILS

+94770523169/+94242225667

Vimalphoto19@gmail.com


Vimal Photo

Vimal Photo





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்
**வெளி**
தடயங்களில் சில...
தமிழும் எழுத்தும்



நுங்கு திருவிழாவின் போது

உங்கள்
**வெளி**
தடயங்களில் சில...
தமிழும் எழுத்தும்




நுங்கு திருவிழா மற்றும் சிலம்பாட்டம்

உங்கள்
**வெளி**
தடயங்களில் சில...
தமிழும் எழுத்தும்



நுங்கு திருவிழாவின் போது

உங்கள்
**வெளி**
தடயங்களில் சில...
தமிழும் எழுத்தும்



நுங்கு திருவிழாவின் போது



நுங்கு திருவிழாவின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி

வீழ்வேன் என்று நினைத்தாயோ!



## இதழாசிரியரின் எழுத்து....

வெளி

இதழாசிரியர்

அருளானந்

வெளி

ஆலோசகர்

பேராசிரியர்

இரா. புஷ்பகாந்தன்

வெளி

உதவியாளர்கள்

கிருசாந், ஆ. கிரிஷ்,

கிதுஷன், சதுஷன், சுதன்

வெளி

கணினி வர்ணக்கலை

தனுஷா மனோகரா

வெளி

தொடர்புகளுக்கு

0771960152

வெளி இதழின் மாற்றங்களை நெருக்கமானவர்கள் கண்காணிக்கலாம். ஜனரஞ்சகமாகவும், சமூகம் சார்ந்த இலக்கியமாகவும் எங்கள் ஞானத்திற்கு தெரிந்தவரை பதிப்பிக்கின்றோம். கருத்துக்களை வரவேற்பதோடு கருத்துக்களின் தாக்கங்களுக்கேற்ப செயற்பாடுகளை மாற்றுவதற்கும் நாம் தயார். இதழினை மக்களை மயப்படுத்தி பேருந்துகளிலும், தெருக்களிலும் விநியோகம் செய்த என் சகாக்களுக்கு என்ன கைமாறு செய்வேன் என்று தெரியவில்லை. சில நேரங்களில் இதழினை கைவிடலாம் என்கிற மடத்தனமான எண்ணங்கள் தோன்றும் யாரோ ஒருவரின் கரங்களில் வெளி இதழ் வெறித்தனமாக வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காட்சி அடுத்த இதழுக்கு பயணிப்பதற்காக உற்சாகத்தை தருகிற போது எழுத்தும் வாழ்வும் கொண்டாட்டத்தின் உச்சம் எழுத்தை கொண்டாட கிடைக்கிற களங்களை விஸ்தரிக்கும் சிறு கருவியே வெளி இதழ்.

வீழ்வேன் என்று நினைத்தாயோ!

அருளானந்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைகளின் பிள்ளை

கவிதை வெளி

எங்களிடம் இருநூறு பனைமரங்கள் இருந்தன
எம் குடிலின் உத்திரமும் கூரையும் கதவும்
பனைகளாலானவை
சுவர்பூச்சிலும் கூட பனஞ்சோறும் பதநீரும் கலந்திருந்தன
கள்ளோடு களித்தாடி
கருக்கோடு மூர்க்கம் பழகி வந்தோம்
கிழங்குகள் முளைத்தெழும் மார்கழியின் முடிவில்
மட்டையை நசுக்கி மண்சுவர்களுக்கு சுண்ணம்பூசுவோம்
புத்தோலையில் பொங்கும் பாலில் தை மணக்கும்
அம்மா குருத்தோலைகளை மாதா கோவிலுக்கு
எடுத்துச் செல்வாள்
ஊர்மீது இறங்கிய இடியை
தலைமீது வாங்கிக் கொண்ட ஒற்றைப்பனை
எங்களின் குலசாமியாக இருந்தது
அதன் பொந்தில் கண்கள் திறக்காத
மூன்று கிளிக்குஞ்சுகள் இருந்தன
'அவர்கள் எப்போது வந்தார்கள்....
எப்படி வந்தார்கள்?
விழித்த போது பனங்காடு விளையாட்டுத் திடலாகியிருந்தது
நான் விடாமல் விரட்டிச் செல்கிறேன்
முரட்டு லாரிகள் வெகு தூரம் போய்விட்டன
முச்சிரைத்து திரும்பும் வழியில்
மூன்று முதிய கிளிகளைப் பார்த்தேன்
அவை என் தோள்களில் இறங்கின
நிமித்தமாய் கடலில் சூறை எழுந்து தணிந்து
நான் பனைகளின் பிள்ளையானேன்
என் ரத்தத்தை பதநீராக ....கள்ளாக மாற்றுவேன்
உங்களது குடிலின் சுவர்க் கீறலுக்கு பூச என் தசைகளையும்
கூரைக்கு உத்திரமாய் என் எலும்புகளையும் தருவேன்
என் இதயம் இம்மண்ணில் பனைகளாய் முளைக்கும்
சிறுமிகள் தோண்டித் தின்னும் நுங்காய் என் கண்கள் கனியும்
உங்கள் கோடைகளுக்காக
நீர்மையோடு சாகாதிருக்கும் என் வேர்கள்
நான் பனைகளின் பிள்ளை
அம் முதிய கிளிகள் அப்படித்தான் என்னை வாழ்த்தின.



தோழர் ஃப்ராய்ட்— – —கொஞ்சம் மனது வையுங்கள்

— –வெய்யில்— –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை வெளி

உயர் கிளையின்
இலை மறைவில் ஏதோயிரு பறவைகள் மூக்குரச
முத்தமிட்டுக் கொள்ளும் சப்தம் மெலிதாய் கேட்கின்றன

அசைந்த மரத்திலிருந்து
விடுபட்ட சருகொன்று
காற்றின் இழுப்புக்கேற்றவாறு
மிதந்துக் கொண்டிருந்தது

நமக்கிடையே
மண்டிக் கிடந்த மௌனப் புதரிலிருந்து
எட்டிப் பார்த்த வார்த்தை முயல்கள்
சட்டென்று
பதுங்கிக் கொண்டன

கோடையென தீய்ந்த நிசப்தத்தால்
உறைந்துப் போன நிமிடத்தின் முகத்தில்
ஒரு யுகாந்திர சாயல் அப்பிக் கிடக்கிறது

இப்போது
நமக்கு தேவையாயிருக்கும்
ஒரு வார்த்தை,
அந்தச் சருகைப் போல்
காற்றில் மிதந்துக் கொண்டிருக்கலாமென
தனித்தனியே
நம்பிக் கொண்டிருக்கிறோம்.



**பதுளை அருள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூஞ்சிப் புத்தகத்திலிருந்து...!

வெளி



வவுனியா மாவட்டத்தில்
கைவிடப்பட்ட 83 குளங்களை
மீளத்தேடி மழைநீர் சேமிப்போம்..!

குடிநீர் விலைக்கானதல்ல
மனிதநேயத்திற்கானது..!!!

Nallaiya vinothan Vinothan



ஒரு மனிதன் பின்பற்றும் மதத்தை வைத்து
அவனை எடை போடுகிற
இழிபுத்தி சமூகமும் இங்கேதான் இருக்கிறது.

தீபா தீபா



மக்களின் உணர்வுகளை, அவர்களின் சிந்தனை மற்றும் உணர்வு முறைகளை, அபிலாசைகளை அடைவதற்கான நடத்தைகளை நோக்கி மாற்றுவதன் ஊடாகவே ஓர் நிலையான மக்கள் சார்ந்த அரசியலை உருவாக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

இந்த பணியை சரிவர செய்யக்கூடிய சாலச்சிறந்த இயந்திரம் பொதுசன ஊடகமே. ஆனால் இன்றைய தேசிய ஊடகங்கள் இதிலிருந்து விலகி கட்சிசார் அரசியலுக்குள் சிக்கி வியாபார தளத்தை தக்கவைப்பதிலேயே அதிக அக்கறையுடன் செயற்படுகிறது. உணர்திறன் மிக்க ஊடகங்களாக மக்களுக்கு உண்மைத் தகவல்களை வழங்காத இந்த ஊடகங்களின் எழுத்துக்களை நான் சாத்தான்களின் எழுத்துக்களாகவே கருதுகிறேன் எந்த ஒரு எழுத்தும் மக்களை சிந்திக்க தூண்டவேண்டும். இன்று ஒரு சில ஊடகவியலாளர்கள் இப்படி எழுதவேண்டும் என்பதில் உறுதியா இருப்பினும் அதற்கேற்ற ஊடகம் இல்லையென்பது துரதிஸ்டமே!

kanthan pushpakaanthan

வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான அந்தப் பனைமரம் - நுங்குத்திருவிழா

இலங்கையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் ஏராளமான பனைகள் உள்ளன. ஆரம்பத்தில் 70 இலட்சங்களுக்கு மேல் இருந்த பனைகள், உள் நாட்டுப் போர், கட்டடங்கள், வீடுகளின் பெருக்கங்கள், மின் வசதிகள், வீதி அகலிப்புகள் காரணமாக, செயற்கையாகவும், இயற்கையாகவும் அழிந்து 20 இலட்சங்களை அண்மித்துவிட்டது.

தமிழ்நிலா
சஞ்சேயன் நந்தகுமார்



மிதவெப்ப மண்டல கால நிலைகளை ஒத்த பகுதிகளில் வளரும் தன்மையுள்ள பனை, ஆகக் குறைந்தது 60 வருடங்களுக்கு மேல் வாழும். விதைக்காமலே வளரும் பனைகளின் இளம் பனைகள் வடலி என்று அழைக்கப்படுகின்றன. பனை பொதுவாக இரண்டு வகைப்படுத்தப்படும். ஆண், பெண். பெண் பனையை முற்காலத்தில் பருவப் பனை என்றும், ஆண் பனையை அழகுப் பனை எனவும் குறிப்பிடுவது வழக்கம்.



பெண் பனையும், ஆண் பனையும்,

பனை 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் 15 அடி உயரம் வரை வளர்கின்றதாம். அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் பூ பூக்கும். அப்போது தான் ஆண் எது பெண் பனை எது என்று அடையாளம் காணமுடியும். ஒரு பனை குறைந்தது 30 அடி உயரத்திற்கு மேல் வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான பனையின் தண்டுப்பகுதி குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் வளைகள்கள், சலாகைகள் என இன்றும் பாவனையில் உள்ளது. சிறு கால்வாய்கள், வாய்க்கால்களைக் கடக்க உதவும் மரப்பாலமாகவும் முன்னைய காலங்களில் பயன்படுத்தினர்.

மேலும் நேர்த்திகள் செய்யும் பறவைக்காவடி கட்டும் மரங்களாகவும் பயன்படுகிறது. நீண்ட மரங்கள் சீவப்பட்டு மின் கம்பங்களாகவும், இராணுவ காவலரண்களை உருவாக்க, பதுங்கு குழி அமைப்பிலும் பயன்பட்டது. எமது ராணுவத்தில் பனைகள் தறிக்க தடை இருந்தது. அதனால் காவலரண் தேவைகளுக்கு தேக்கு மரங்கள் வளர்க்கப்பட்டன.

இதன் வேர்த்தொகுதி நீண்டு வளர்வதால் நில நீர் மட்டங்களை மேல் உயர்த்தி வைத்திருக்கும். அதிக பனைகள் உள்ள இடங்களில் நீருக்கு பிரச்சினை இருக்காது. மழை நீரினையும், காற்றில் உள்ள ஈரப்பதத்தையும், தண்டு பகுதியில் சேகரித்து, கடுமையான வறட்சி காலங்களில் கூட, நிலத்தடி நீரை எதிர்பார்க்காமல் உயிர்வாழும். இலைகள் தண்டுடன் 6-8 அடிகள் இருக்கும், வீசும்காற்றின் வேகத்தை மாற்ற, திசையை மாற்ற இவை இயற்கையாகவே அமைந்துள்ளன, இவை வேலிகள், கூரைகள், பெட்டிகள், பாய், போன்ற பல பொருளின் உருவாக்கத்தில் இன்றும் உள்ளது. ஆகப் பண்டைய காலங்களில் எழுதும் ஏடாகவும் பயன்பட்டது.

ஓலையைத் தாங்கி நிற்கும் பனம் மட்டைகள், வீடுகளைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கவும், பழைய மண் வீடுக-ளில் தடுப்புத்தட்டிகள் பின்னுவதற்கும், கயிறு திரிக்கவும் பயன்படுகிறது. ஒருகாலத்தில் பச்சை மட்டை அடிகள் பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.



குளக்கரையில் பனை மரங்கள்

அடி முதல் நுனி வரை பனையின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு பயன் தருபவை. இதனாலேயே தேவலோகத்து கற்பகதருவுக்கு ஒப்பிட்டு நமது பனையையும் கற்பக தரு என்றார்கள் நம் முன்னோர்கள்.

**100 பனைகள் ஒரு காட்டை சமன் செய்து விடுகின்றன.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுங்குத்திருவிழா – 2018

இப்போது நுங்குத்திருவிழா பற்றிப்பார்ப்போம், வவுனியா, சுயாதீன இளைஞர்களினால் வெளியிடப்பட்ட அழைப்பிதழின் மேல் ஏற்பட்ட ஆர்வத்தின் பேரில், "ஆத்தல்" குழுவினருடன் ஒரு பயணம் மன்னார் நோக்கித்தயாரானது. நண்பர்களுடன் பேருந்தில் ஏறி மன்னார், பாப்பா மோட்டை சந்திக்கு அண்மையில் உள்ள திருவிழா நடக்கும் பகுதியில் ஒன்றுகூடினோம். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் குளக்கரையோரமாக பனைகள் அதிகம் உள்ள ஒரு இடத்தினை தெரிவு செய்திருந்தார்கள். மழை பெய்து ஓய்ந்திருந்தது. நிலத்தின் ஈரலிப்புடன் சற்று சூடான காற்றும் மனதிற்கு இதம் தான். மிகவும் சிறப்பான இடம் அது. அவர்கள் வேறு ஒரு இடத்தில் விழிப்புணர்வு நிகழ்த்திக்கொண்டிருந்ததால் நாங்கள் அதிக நேரம் காக்கவேண்டி ஏற்பட்டது.



வவுனியா இளைஞர்களும் வந்து சேர நுங்குத்திருவிழாவும் ஆரம்பமானது. பனை மரத்தின் பயன்கள் பற்றிப் பேசிக்கொண்டே நுங்குகள் பறிக்கத் தயாரானோம். திருவிழாவில் கலந்து கொண்ட இளைஞர்கள் தாங்கள் சென்றவருடம் 2000 பனம் விதைகள் நாட்டியதாக கூறும்போதே மெய் சிலிர்த்துக் கொண்டது, எமது வாழ்வாதாரமாக இருந்த மரம் இன்று இப்படி அருகி விட்டது என்று நினைக்கும் போது சற்று கடினமாக தான் இருந்தது.

முன்பெல்லாம் பனைகள் உள்ள வீடுகளில் ஒவ்வொருநாளும் திருவிழா தான். நுங்கு காய்க்கதொடங்க நுங்கு, சீக்காய். பின்னர் பழுத்து நுங்கு விழுந்தால் பனம்பழம் பொறுக்கி பனங்காய் பணியாரம், பினாட்டு, பனங்கொட்டையிலிருந்து பனம் பாத்தி போடுவார்கள். ஏனையவை ஊமல் என்றாகி சமையலுக்கு அடுப்புகள் எரிக்க பயன்படும். முளைக்கும் பனங்கொட்டைகளை பிளந்து பூரான் சாப்பிட்டிருப்போம். பின்னர் பனங்கிழங்கு அதில் இருந்து புளுக்கொடி. பின்னர் மா என்று நீண்டு போகும்.

இப்போது எம் கலாசாரங்களை காக்க திருவிழாக உருவாக்கவேண்டி உள்ளது. போராட்டங்களை உருவாக்கி தீர்வுகளும், நினைவு நிகழ்வுகள் மூலமே மக்களை திரட்டவும் முடிகிறது. இப்படி ஒரு விழாவிற்கு இளைஞர்களின் பங்களிப்பு கிடைப்பது என்பது கடினம் தான். அதை கலந்து கொண்டோர் எண்ணிக்கையும் விளக்கிக்கொண்டது. இருந்தாலும் எங்களோடும் நண்பர்கள் நின்றார்கள். மரம் ஏறுபவர்களால் பயன்படுத்தப்படும் "தலநார்" இளைஞன் ஒருவரால் செய்து காட்டப்பட்டது. அதை காலில் மாட்டி பனையேறினான் அவன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊரில் சின்னவர் ஊர்ப்பனைகளில் அதிகமானவற்றை தன் வசம் வைத்திருந்தார். காலில் தலநார் போட்டு ஏறி முட்டிகளில் உள்ள கள்ளை போத்தல், கான்களில் நிரப்பிக்கொண்டு இறங்குவார். இடுப்பில் கத்தி வைக்க ஒரு அமைப்பு இருக்கும், ஏறு பெட்டி என்று சொல்லுவார்கள் என்று நினைக்கிறன். நெஞ்சில் கீறாமல் இருக்க ஒன்று கால்களில் ஒன்று என தோலில் செய்த ஒன்றை அணிந்திருப்பார் அது நெஞ்சுத்தோல் என்றும், கால் தோல் என்றும் சொல்லுவார்கள். நாங்கள் கேட்டால் கருப்பணி எடுத்துத்தருவார். இறக்கும் போதே உடன் கள்ளு என்று ஒரு சிலர் நிற்பார்கள். மிகுதி தவறணைகளுக்கு கொடுப்பார். மிகுதி வீட்டில் வியாபாரம். சின்னவர் சில நேரங்களில் வைத்துவிட்டு போகும் போத்தலில் விரல் விட்டு நக்கி இருக்கிறேன், அப்போது புளிக்கும் என்று நினைத்தது இப்போதும் அப்படியே.

இப்போது இதை குலத்தொழில் என்று செய்பவர்கள் இல்லை. எங்காவது ஒரு சிலர் செய்கிறார்கள். குடும்ப சூழ்நிலைகள் காரணமாக சிலர் இப்போதும் பனைத்தொழிலில் இருக்கிறார்கள். இப்போது சட்டங்களும் அதிகம். நினைத்தபாட்டில் விற்கமுடியாது.

நுங்கு விழத்தொடங்கியது.




பின் அவற்றைப் பொறுக்கி அடுக்கினோம். வெட்டி வெட்டி தந்தார்கள் குடித்துக்கொண்டே இருந்தோம். சின்ன வயதில் நுங்கு குடித்த ஞாபகம் மீண்டுகொண்டது. அதன் பிறகு இது தான் முதல் தடவை. வீதிகளில் விற்றுக்கொள்வார்கள். ஆனால் வாங்கியதில்லை. அந்நிய உணவுகள், அந்நிய குடிபானங்கள் வருகையின் பின் இவை எங்கே, பீட்சாகளிலும் கோக்கோ கோலாக்களிலும் கழிகின்றன. வீதி ஓரங்களில் அடுக்கி வைத்து விற்பனையில் ஈடு படுபவர்களை கடந்து வந்திருப்போம். வெளிநாட்டவர் அருந்திச்செல்லும்போது பந்தா எனவும் நினைத்திருப்போம்.

திருவிழாவில் கலந்து கொண்ட ஒருவர் தற்சார்பு பொருளாதாரம் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். ஆங்காங்கே நடைபெறும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க செய்யவேண்டியவை பற்றி சொன்னார். உண்மை தான் விசிறி முதல் அத்தனைக்கும் மாற்றீடு வந்து விட்டது. ஆனால் பனை உயிர் வாழ அத்தனையும் தரும், ஒருவனின் வாழ்வாதாரம் முழுவதையும் ஒரு பனையே தரும், எனக்கு நினைவு உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களிலேயே பனையின் மொத்தப்பயனும் அனுபவித்துவிட்டேன். பனை தன் ஒவ்வொரு அங்கங்களையும் எங்களுக்கு ஈர்ந்துவிடுகிறது. இருப்பினும் இறப்பினும் பனை வீணாகப்போவதில்லை.



காலை எழும்பி ஓலைப்பாயை சுருட்டி வைத்து. பன்னாடை வைத்து எரித்து. தேநீர் அருந்தி. பெட்டியில் மா குழைத்து புட்டு அவித்து. பனம்பழம் பொறுக்கி போட்டு எங்கள் தேவை போக மாட்டுக்கும் வெட்டி வைத்து. சுழகில் அரிசி பிடைத்து, கறிசமைத்து திருகணையில் வைத்து மத்தியான சமயல் முடித்து. உறியில் இருக்கும் தயிர் எடுத்து உண்டு. பனம் ஈர்க்கு கட்டிலில், விசிறி விசுக்கி காற்று வாங்கி வாழ்ந்தோம். இன்னும் நிறைய சொல்லலாம். சொல்லிக்கொண்டே போகலாம்.

எங்களுடன் கூடவந்தவர் "நுங்கு வண்டில்" கட்டிக்கொண்டிருக்க நாங்கள் நுங்கில் குளித்துக்கொண்டிருந்தோம். இப்போது யார் நுங்கு வண்டில் செய்து விளையாடுகிறார்கள். ஊமல் பொம்மைகள் எங்கு. பனையோலைக் காற்றாடிகள் என்றால் தெரியுமா? நேரம் இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. நுங்கு குடிக்கும் ஆசையை அரை மனதுடன் நிறுத்திக் கொண்டு பனை ஓலைகளில் இளைஞர்கள் பிளா செய்யத்தொடங்கினார்கள். பதநீரை பிளாக்களில் ஊற்றிக் குடித்து மகிழ்தோம், பதநீர் என்பது கள்ளு அல்ல முட்டியில் சுண்ணாம்பு தடவி வைத்து எடுப்பது. போதை தாராது. மிகச்சிறந்த மருந்து அது. கருப்பணி காச்சி பனாங்கட்டிகள் செய்து சீவித்தவர்கள் நாங்கள். அதை விட இந்த காலம் பிளா பயன்படுத்துவதே குறைவு என்று சொல்லலாம். இன்னும் பிற சில இடங்களில் கோவில்களில் கஞ்சி திருவிழாக்களுக்கு இன்றும் பாவனையில் உள்ளது. அது பாராட்டக்கூடியது.

இப்போது பனைகளும் இல்லை, இலை வெட்டி பிளா செய்ய ஆட்களும் இல்லை, அலுமினியங்களும் சில்வர்களும் வந்து தேவைகளை குறைத்தும் விட்டது.




இறுதியில் இன்று குடித்து தீர்த்த நுங்குகளுக்கும் சேர்த்து "5000 பனம் விதைகள் நடுவோம்" என்று சபதமும் செய்து கொண்டோம். இந்த முயற்சியில் நாங்களும் இணைந்து கொள்வோம். நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். பழமைகளை பேணும் சந்ததி இன்றும் எம் மத்தியில் வாழ்கின்றது என்ற திருப்தியுடன் பனையின் பயன்களை பற்றி பேசியவாறு வீடு நோக்கி புறப்பட்டோம்..



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திரும்பிய வழிகளை பனைகள் நிறைக்கவில்லை. ஆனால் எங்களிடம் இத்தனை பனைகள் இருந்தன.

| | | |
|---|---|---|
| 01. ஆண் பனை | 02. பெண் பனை | 03. கூந்தப்பனை |
| 04. தாளிப்பனை | 05. குமுதிப்பனை | 06. சாற்றுப்பனை |
| 07. ஈச்சம்பனை | 08. ஈழப்பனை | 09. சீமைப்பனை |
| 10. ஆதம்பனை | 11. திப்பிலிப்பனை | 12. உடலற்பனை |
| 13. கிச்சிலிப்பனை | 14. குடைப்பனை | 15. இளம்பனை |
| 16. கூறைப்பனை | 17. இடுக்குப்பனை | 18. தாதம்பனை |
| 19. காந்தம்பனை | 20. பாக்குப்பனை | 21. ஈரம்பனை |
| 22. சீனப்பனை | 23. குண்டுப்பனை | 24. அலாம்பனை |
| 25. கொண்டைப்பனை | 26. ஏரிலைப்பனை | 27. ஏசறுப்பனை |
| 28. காட்டுப்பனை | 29. கதலிப்பனை | 30. வலியப்பனை |
| 31. வாதப்பனை | 32. அலகுப்பனை | 33. நிலப்பனை |
| 34. சனம்பனை | | - இணையத்தில் கண்டவை |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரான்மா

யாதொரு ரகசியமற்ற
என் இருப்பின் வெளி
மந்தகாச நியூரான்செல்லை
அதே பழைய ஆதி சைகையுடன்
திமிரிக்கொண்டிருக்கிறது

புரிதலுக்கு அப்பாற்பட்டு
வாழ்நிலபூமியின் தொலைநகர வடிவச்சிதைவை
பழம்பெரும்பொய் சுட்டிய விரல்நேரில்
மழை சகதிக்கழிவினூடாக
யானைதடம் பிதுங்கிய
அகலகால்வழிச் சாலைக்கு
முன்பொருகால நைல்நதி
ஓடிக்கொண்டிருந்ததாய்
நம்பப்பட்டிருந்தது

புராணித்திருந்த மீன்நகரக் கதைகளை
மூதாதையர் கதைத்த
வாய்மொழிச்சொல்லிலிருந்து
பிரிந்த இரவொன்றின் யாம
மத்தியமத்தில்
யன்னலில் ஒழுகிய
ஈரக்குரலில் ஊடுருவிய
மின்மினி சப்தங்களின் நாவு
காதுநாள திசு சுரப்பி தீண்டியபோது

அந்தரான்மா உண்ணும்
ரகசியபசியை காடு
வளர்த்த யோனிமேட்டில்
ஐந்து கன்னியுறுப்பு கொண்ட
பெண்ணொருத்திக்கான
சிற்பமொன்றை
அகல்வாராய்ச்சியில்
கண்டெடுக்கப்பட்டிருந்ததாக
மீட்சித்துக்கொண்டிருந்தது

விநோதங்கள் வீங்கிய
பழங்கால உறுப்புகள் தடித்த
ஒன்றிடமிருந்து
ஊதி அணைத்த சிறுநெருப்பின்
வெடிப்புச் சாம்பலை
கண்கள் வாங்கிய ஆதிநிற
உருநெடி கனன்ற மனிதவாசத்தை
கனவுக்குள் உருவிவிட்டிருந்தபோது

அறையிலிருந்து மற்றொரு நிழல்
என்னிலிருந்து பெருத்தெழுந்து
தாழடைத்துச் சென்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
பயணப்பட வேண்டும்..

இங்கிருந்து
என்னவென்று
என்னை
எடுத்துச்செல்வேன்..!!"

புத்தகங்களை
சுமப்பது போல,
முதுகிலோ...!!!!

குழந்தையை
சுமப்பது போல,
இடுப்பிலோ...!!!!

காதலை
சுமப்பது போல,
நெஞ்சினிலோ...!!!!

என்னைச்சுகமாக
சுமந்து செல்ல
முடியாது..!!
பிணமாக
சுமந்து செல்வதென்றால்,
இதுவரை நான்
ஒருமுறையேனும்
இறக்கவில்லையே..!!

இறந்தாலும்,
அம்மா
சிவனுக்குப்பேத்தி
அப்பா
கர்த்தருக்குச்சித்தமானவர்..!!
மரணச்சடங்கில்
மதம் மாட்டிக்கொள்ளுமே..!!




நான்
பெண்களுக்குள்
ஆசீர்வதிக்கப்பட்டவன்,
ஆனால்
காதலுக்குள் சபிக்கப்பட்டவன்..!!

மறந்தே போனேன்,
நான்
பயணப்பட வேண்டும்..!!
நீங்கள்
கண்டுகொள்ளாத
அவர்களில் ஒருவன் தான் நான்..!!

குப்பியை கடிக்காமால் வீசியபோதே
கைக்குண்டை
நெஞ்சோடு அணைத்து
வெடிக்காதபோதே..!!

உங்களைக்குறித்து,
தேசத்தைக்குறித்து,
விடுதலைகுறித்து,
எந்தக்கவலையும் எனக்கில்லை..!!

ஒரு கையில்
நெகிழிப்பை நிறைய
வெண்சுருட்டுக்களும்..!!
மறு கையில்
என்னையும் சுமந்துகொண்டு
பயணப்பட தொடங்கிவிட்டேன்..!!
கூட
யாரும் வரவேண்டியதில்லை..!!

என்னைப்போல் ஒருவனிடம்
தீப்பெட்டி வாங்கிக்கொள்வேன்,
நுரையீரலை புகையால்
நிரப்பிக்கொள்ள..!!

**ந.பிரதீப்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசம்

செந்துபிள்ளை

நேசிப்பு மிகுந்த மனங்களுக்கு உண்மையான நேசிப்பு கிடைப்பதே இல்லை என்று நினைத்தப்படியே தெருவை வேடிக்கைப்பார்த்தேன் ..நன்கு மழை பெய்து கொண்டிருந்தது .ரோட்டோரத்தில் இருந்த சருகுகுப்பைகள் எல்லாமும் மழையினால் அடித்துவிடப்பட்டன..செடிகள் நன்றாய் நனைந்து பல இதழ்களை உதிர்த்தபடி இருந்தன ..!!

என்னை அழைத்தப்படியே டீயோடு வந்தாள் டீனா ..

"இப்ப எதுக்கு அழுவுற..?" என்றவளிடம் உனக்கு அதெல்லாம் புரியாது என்றேன் .."just ரைட்டிங் தானே ..அதை படிச்சிட்டு ஏன் இப்படி அழுதுட்டு இருக்க..!!" அவளின் சலிப்புகுரல் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே அவளிடமிருந்த டீயை வாங்கி பருகிக்கொண்டேன் ..அவளிடம் அந்த கதையைப் படிக்குமாறு கொடுத்தேன்...அவளும் படித்துமுடித்தாள்... இருவருமே அமைதியானோம் ..

"இப்ப சொல்லு இந்த ஷ்யாமாவை நினைச்சா அழுகை வருதுல்ல ..""!

" ஷ்யாமைவிட அவளை தேடிச் செல்லும் காதலனை நினைச்சி அழுகை வருது .." என்றாள் அவள்

**அனுபவங்களால் மட்டுமில்ல எழுத்துக்களால் கூட நம்மை கதற வைக்கமுடியும், எழுத்தாளர் மற்றவருக்காக எழுதுவதை விட தன் உணர்வோடு எழுதித் தீர்த்தாலே போதுமானது...பலரின் உணர்வுகளுக்கு அவை உணவாகலாம் ..**

"அவர் என்ன எழுத்தாளரா ..??"

இல்லையென்று அவளுக்கு நான் தலையசைத்தேன் ..

எழுத்தாளர்கள் மீது மரியாதையும் ஏற்படுவதும் , அதீத அன்பு வருவதும் இது ஒன்றும் புதிதல்ல. அந்த கதையை என் வாழ்க்கையோடு பொருந்திப் பார்க்கிறேன் .. தன் காதலனை காப்பாற்றிய ஷ்யாமாவால் தன்னை காப்பாற்றாமல் போய்விட்டதைப் பார்க்கும்பொழுது கூசிப்போனது...எத்தனை பெரிய சுயநலவாதி நான் என்னைப் பற்றி மட்டுமே யோசித்துக்கொண்டிருக்கிறேன் ..!என்று

"இது உண்மைக்கதையா ..?"" அவளுக்குள் சின்னசின்னதாய் சந்தேகங்கள் ..

"எழுத்தாளருக்கே வெளிச்சம் ..? "

டீயை பருகி முடித்தப்போது ..

"அவர் நிறைய வலிகளோடு வாழ்க்கை நடத்துபவராய் இருப்பார் .....அதனால்தான் வலிகளை படிப்பவரிடம் எழுத்து மூலமாக கன்வே செய்துவிடுகிறார் ..!என்றேன் ..சிறிது நேரம் கழிந்திருக்கும் ..

" இப்ப இந்த அழுகை ...அந்த ஷ்யாமாவிற்காகவா ..?? எழுத்தாளருக்கானதா ..?"" என்றாள் டீனா ....அவளைப்பார்த்தேன் ..எழுத்தால் எழுத்தாளரின் மீது ஈர்ப்பானது போல கேட்கிறாள் ..

"எழுத்துக்களுக்கானது ...!" என்றேன்... அதன்பிறகான விவாதங்களில் நிறைய சந்தேக கேள்விகளை அவள் என்னிடம் தொடுக்கலாம் ..!!

"எழுத்துக்கள் என்பதே வலியின் வெளிப்பாடுதான் என்பதை அவள் உணர வலி தேவை ....!!அவளுக்கு வலி என்பதே வந்துவிடக் கூடாது என நினைத்தேன் ....!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழ
# வெளி
ஞ்
சி
ப் புத்தகத்திலிருந்து...!



#ரெயில்வே கேட்ட திறந்த உடன பைக்ல வேகமா
அந்த பக்கம் போறவனுக்கு என்ன
#வேர்ல்டு கப்பாடா குடுக்க போறாய்ங்க....
அமைதியா போங்கடா
#அப்புரசன்டிகளா..

**krish nadarajah**



" எப்பேற்பட்ட சபிக்கப்பட்ட இடங்களில் இருந்து
அவர்கள் வந்திருந்தாலும் சரி, அந்த இடங்கள்
மிகவும் குளிராக இருந்திருக்க வேண்டும்.
இல்லையென்றால், அவர்கள் ஏன் தவளைகளைப் போல
கொக்கரித்துக் கொண்டு, தீயில் பல்வேறு வகையான
சருகுகளை போட்டபடி கடவுள்களிடம் மன்றாட வேண்டும்."
-அசுரன்-

**K. kathirkamathambi vithusan**

நுகர்ச்சியின் உச்சம் அருங்கோடைக்காலத்தில்
பெய்யும் மழையின் துளிகளால்
எழும் மண்வாசனை



**Selvarasa Thanushan**



தோல், குருதி, எலும்பு
மூளை, ஆன்மா
என எனக்குள்
வியாபித்துள்ளாய்...
#ஜெஸ்னி

**Sri Nagarajah**


வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகத்தரு எனும் பனை

பராமரிப்பின்றி இயற்கையாகவே வளர்ந்து தன் அனைத்து பாகங்களுடாகவும் எமக்கு பயன்தரும் புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினமான கற்பகத்தரு எனும் பனை இன்று எமது சுயநல நோக்கங்களாலும், அக்கறையின்மையாலும் அழிவுப்பாதையை நோக்கி சென்றுகொண்டிருப்பது பெரும் துன்பியலே. எந்த அருங்கோடையிலும் வாடி வதங்காது வரட்சியைத் தாங்கி எல்லா மண்வளத்திலும் வளரக்கூடியதே இந்த பனை. கம்பீரமான கறுப்பு ஆண் போல நிமிர்ந்து நின்று ஊருக்கு அழகு மெருகூட்டும் பனைமரங்கள் உண்மையில் மனிதனுக்கு கடவுளின் கொடுப்பனையே.



காகிதங்கள் தோன்றாத காலத்தில் எழுத்தறிவைச் சுமந்த ஏடுகள் அறிவின் சின்னம். ஏடு என்ற சொல்லின் வேர் பனை ஓலை அல்லவா? அறிவுப்பசியை பன்னெடுங்காலமாக போக்கிய பனை மரங்களே ஏடுகளின் தாய். ஆகவே எமக்கும் பனைக்குமான உயிர்மத்தொடர்புகள் எந்தளவு ஆழமானவை என்பதை உணரமுடிகிறது. மனிதர்களின் பிரக்ஞையானது நிஜமான மனிதத்திற்கும் நிஜமற்ற போலி ஆடம்பரத்திற்குமிடையில் விளிம்பில் தள்ளாடியபடியேதான் இருக்கிறது அதனால்தான் பனை போன்ற சர்வவல்லமையுடைய மரங்கள் கணக்கெடுக்கப்படாமல் போகின்றது. பழந்தமிழர் வாழ்வில் பனை மரமே பணம் தரும் மரம். அன்று கரும்புச் சர்க்கரை தோன்றவில்லை. இனிப்புக்கு இலுப்பைப் பூவும், பனங் கருப்பட்டியுமே பயனாயிற்று.

முப்பத்தியாறு முதல் நாற்பத்தியிரெண்டு மீட்டர் வரையான சராசரி உயரம் கொண்ட இந்த பனைகள் 15 வயதில் வடலி பருவத்திலிருந்து முதிர்ச்சியடைந்து அடுத்தகட்ட வளர்ச்சிக்குள் நுழைகிறது கிட்டத்தட்ட மனிதனின் சராசரி ஆயுட்காலத்தையே கொண்டவை இந்த கற்பகத்தருக்கள். **"பனை மரத்தில பாதி வளர்ந்திருக்கான், ஆனால் ஒன்றுமே தெரியல"** எனக் பனையுடன் ஒப்பிட்டு குறை கூறும் சமுதாயம் ஒரு மனிதன் தனது வாழ்நாளில் எத்தனை தவறுகளை, தீமைகளை செய்யப்போகின்றான் ஆனால் இந்தக் கற்பகத்தருக்கள் எத்தனை நன்மைகளை மனிதகுலத்திற்கு அட்சயபாத்திரம் போல அள்ளி வழங்குகின்றது என்பதை பார்க்கும்போதுதான் நாம் அதற்கு எந்தளவிற்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம் என்பதை உணருகின்றோம் எனினும் அந்த பனையழிப்பை இன்னும் எமது மனிதகுலம் நிறுத்தவில்லை.



தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவும், வியாபார இலாப நோக்கத்திற்காகவும், யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கிற்கு வந்த வீட்டுத்திட்டத்திற்காக வீட்டின் கூரைகளுக்காகவும் பனைகள் எண்ணற்ற அளவில் அழிக்கப்பட்டு வருகின்றது வந்துள்ளது. இன்றைய காலத்திற்கு முந்திய இருபது வருட காலத்துடன் ஒப்பிடும்போது பனம்பொருட்களுக்கு இருந்த கிறாக்கியானது பாரியளவில் சரிந்துள்ளதையும் பனைகள் சரிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கமுடிகிறது. உணவிலிப் பனம் பொருளுற்பத்திகளை எமது சமூக சந்தையில் அந்நிய ஆடம்பர உற்பத்திகளுடன் போட்டிபோட்டு உள்நாட்டவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை செய்வதில் பனம்பொருளுற்பத்தியாளர்கள் தோல்வியடைந்துள்ளனர் என்பதே உண்மை. அந்த தோல்வி அந்நிய பொருள் மோகத்தாலும், போதிய வருமானமின்மையாலும், தொழிலை விஸ்தரிக்க மூலதனமின்மையாலும் ஏற்பட்டதே. அந்த தோல்வியால் பனம்பொருளுற்பத்தி வியாபாரத்திற்கும், பனம்பொருளுற்பத்திக்கும் அது சார்ந்த புதியவர்களை உள்வாங்குதலில் பாரிய நலிவுப்போக்கு காணப்படுகிறதென்பதே மெய். தற்சார்ப்பு பொருளாதாரத்தின் மூலம் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் பனை தனது அவயங்கள் அனைத்தின் மூலமும் வருமானங்களை வாரிவழங்க தயங்கவில்லை எனினும் அதற்குரிய சரியான கேள்விச் சந்தையை பிறநாட்டு செயற்கை சுவையூட்டிகளும், சூழலுக்கு ஒவ்வாத பிளாஸ்டிக்குகளும் தட்டி வீழ்த்திவிட்டு சந்தையில் முன்னணியில் நிற்பதே தற்காலத்தின் தன்மை. பனை மர வளர்ப்புக்கு இன்றைய ஆட்சியாளர்கள் போதியளவான திட்டமிடலை மேற்கொள்வதில் காலதாமதமாகவே இருக்கின்றார்கள். பன்னாட்டு நிறுவனங்களை அழைத்து தொழில் முதலீடு செய்ய வழங்கப்படும் ஊக்கிகள் பனை மரம் வளர்த்தல் போன்ற பல்வேறு தற்சார்பு பொருளாதார தொழில் முயற்சிகள் பற்றி கவனம் செலுத்தாதது ஏன் என்பது தற்போதுவரையான மனச்சஞ்சலமே.

பனையின் பயன்கள் பற்றி புறநானூற்று 225 ஆவது பாடலான **"வலம்புரி ஒலித்தது"** பாடலில் புலவர் ஆலத்தூர் கிழார் சோழ மன்னன் நலங்கிள்ளியின் படையின் சிறப்பை பாராட்டுகிறார். அதில் அவர்

*" தலையோர் நுங்கின் தீங்சோறு மிசைய இடையோர் பழத்தின் பைங்கனி*
*மாந்தக் கடையோர் விடுவாய்ப் பிசிரொடு சுடு கிழங்கு நுகர*
*நிலமலர் வையத்து வல முறை வளையி வேந்து பீடழித்த ஏந்து வேல் தானை "*

என்று குறிப்பிடுகிறார் அதாவது நலங்கிள்ளியினது படையினரில் முன்னே செல்லும் வழியில் பனைமரங்களைக் கடக்கும்பொழுது பனை நுங்கின் இனிமை கொண்ட நீரை உண்ணுவர். இடைப்பகுதியில் உள்ளோர் மரங்களைக் கடக்கும்பொழுது பனம்பழத்தின் இனிய கனிப்பகுதியை உண்ணுவர். படையின் இறுதியில் செல்பவர் "பிசிரொடு சுடுகிழங்கு" (தோலுடன் கூடிய சுட்ட பனங்கிழங்கை) உண்ணுவர். இளநுங்கு, அது பழுத்து பனம்பழம், பழத்தின் கொட்டையில் இருந்து விளைவித்த பனங்கிழங்கு யாவையும் வெவ்வேறு காலங்களில் விளைபவை. அவ்வாறு காலங்கள் கடந்து கடக்கும் பெரும்படையை உடையவன் சோழன் நலங்கிள்ளி எனப் பாடுகிறார் புலவர் அதில் பனையின் பயன்களும் சோழன் நலங்கிள்ளியின் படைபலமும் தெளிவாகிறது.

**"யானை இறந்தால் ஆயிரம் பொன்"** என்பவர்களுக்கு புரியவில்லை பனை இருந்தாலும் வீழ்ந்தாலும் ஆயிரம் பொன்தான். பிஞ்சிலிருந்து வடலியாகி மரமாகி, கீழே விழும் வரையும் விழுந்த பிறகும் எல்லா வகையிலும் எல்லா அவயங்கள் மூலமாகவும் பயன்தரும் பனை என்பதே நிதர்சனம், பனை பற்றி எமக்குத் தெரிந்தது பனங்காய் பணியாரமும் பனங்கள்ளும் மட்டுமே! பிளேன்ரீயும் பனங்காய் பணியாரத்தையும் தவிர பனைபற்றி அடுத்தகட்டத்துக்கு சிந்திக்க எமது மனம் பின்நிற்கிறது. நவீனம் நோக்கி ஓட ஆரம்பித்த எமது மனதை இழுத்துப்பிடித்து திசைதிருப்புவதில்தான் எமது மனதிடகாத்திரமும் ஆரோக்கியமான எதிர்கால சூழலும் தங்கியிருக்கிறது.

பனை என்ன பயனைத்தர மறுக்கிறது எமக்கு? அனைத்து உதிரிகள் மூலமாகவும் பயன்களை உதிர்ந்துகொண்டேதான் இருக்கிறது பனை கூரையாய், வேலியாய், கிராதியாய், சுவராய், கால்நடை உணவாய், விறகாய், மனித உணவாய், அலங்காரப் பொருளாய், பண்பாட்டுச் சின்னமாய், இயற்கைப் பாதுகாவலனாய், மருந்தாய் பல்வேறு கோணங்களில் பயன்தருனராகவே பனை இருக்கிறது. பனையை வளர்த்து சரியான வருமான மூலங்களையும் சூழல் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதில் நாம்தான் தோல்வி கண்டுள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனைமரம் உணவு மற்றும் உணவிலிப் பொருள்களை நல்குகிறது.

**உணவுப் பொருட்களில்**

பதநீர் ,கருப்பட்டி,வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம் மிட்டாய், பனங்கூழ், நுங்கு,பனம் பழம் ,பூரான், பனாட்டு (பனம்பழ சாற்றை காய வைத்து எடுப்பது), பனங்காய் பலகாரம், கள்ளு, பனஞ் சாராயம், வினாகிரி, பனங் கிழங்கு, ஒடியல்,ஒடியல் மா,ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ், புழுக்கொடியல் என்பனவும்

**உணவிலிப் பொருட்களாக**

பனந்தும்பு, தூரிகைகள், கழிகள்,பனையோலைப் பொருள்கள், சுளகு, நீத்துப்பெட்டி, இடியப்பத் தட்டு, விசிறி, கூடை, பாய், ஓலைச்சுவடி, கடகம், ஓலைத்தொப்பி, அடுக்குப் பெட்டி, உறி, பிளா, தொன்னை, பறி, திருகணை, வீடு வேய ஓலை,வேலிக்கு கருக்குமட்டை, ஊமல் (அடுப்பிற்கு), அலங்காரப் பொருள்கள், மரம், மரப் பொருள்கள், வெள்ளிடை மாலை, எனவும் பல பலன்களை மனிதகுலத்திற்கு தயக்கமின்றி தந்துகொண்டு தயாராகி நிற்கிறது பனை, பனையை காக்க தயாரா இல்லையேல் இன்னும் பனைகளை அழிக்கத் தயாரா என நாம்தான் முடிவுகொள்ளவேண்டும். உணவிலிப் பொருட்களுக்காக அழிக்கப்படும் ஒவ்வொருபனைக்காகவும் இன்னுமிரண்டு பனைகளை நடுவதில் எந்த மட்டத்தில் தாழ்ந்துவிடப்போகிறோம் நாம்?


ஆய்வொன்றின்படி ஒரு பனை மரமானது ஓராண்டில் 150 லிட்டர் பதநீர் தரவல்லது என்கின்றனர். இந்தியாவின் தமிழ்நாட்டில் பதநீர் விற்பனை மூலமாக பல குடும்பங்கள் தமது வாழ்க்கைச்சக்கரங்களை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவை விட கம்போடியாவில்தான் பனையின் பயன்களை உச்சமட்டமாக மக்கள் அனுபவிக்கிறார்கள். தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேலான மக்களின் வீடுகளில் கருப்பட்டியும், பதநீரும், பனை-யோலை தொப்பியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முற்றாத பனங்காயை நுங்கு என அழைப்போம். நுங்கு மிகவும் சுவையான ஒரு பானம். ஆனால் அதனை நாம் தொழில் முயற்சியில் பயன்படுத்துவது இல்லை. தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து நுங்கு தகரத்தில் அடைக்கப்பட்டு உலகம் எங்கும் ஏற்றுமதியாக்கப்பட்டு அந்நியச் செலாவணி ஈட்டிக்கொள்கின்றார்கள். தான் மட்டும் வளராது தன்னுடன் இயற்கையில் ஆலமரங்களையும் அரச மரங்களையும் ஒட்டி வளர்பதே பனை.

ஐந்தாண்டிற்கு முன்னரான ஆய்வொன்றில் இலங்கையில் 11.1 மில்லியன் பனைகள் உள்ளதாகவும் அவற்றில் 10.5 மில்லியன் பனை மரங்கள் வடபுலமான யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைதீவு ஆகிய 4 மாவட்டங்களிலும் பரம்பி இருக்க மிகுதி 0.6 மில்லியன் மரங்கள் மட்டுமே ஏனைய இடங்களில் காணப்படுகிறது. தற்போதைய சரியான தகவல்களை திரட்ட முடியவில்லை எனினும் கடந்த சில வருடங்களில் பாரியளவு பனையழிவினை பனைகள் சந்தித்துள்ளதை அனைவரும் ஏற்றுக்கொண்டேதான் ஆகவேண்டும், அழிந்த பனைகளிற்கு பதிலாக பல பனைகளை உருவாக்கி அடுத்த சந்ததியிடம் கையளிக்கவேண்டியது எமது தார்மீகப் பொறுப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் சிதைத்த சிதைவுகளின் பின்னும் யுத்தத்தின் எச்சங்களாக சன்னங்களை தன்னகத்தே தாங்கிக்கொண்டு நிமிர்ந்துகொண்டு வடபுலமெங்கும் பனைகள் இருந்துகொண்டேதான் இருக்கின்றன.

பனை பற்றிய விழிப்புணர்வுகளும், பனையின் பயன்களும், பனையை பாதுகாக்கவேண்டிய அவசியமும் மக்களிடம் கொண்டு செல்லப்படவேண்டும் இது பற்றிய நடவடிக்கைகளை நாடெங்கிலுமுள்ள பனை அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொள்ளவேண்டும். சில காலமாக வடபுலத்தில் புதிதாக ஆரம்பித்துள்ள "கற்பகம்" எனும் பனஞ்சந்தை பொருட்களகம் மக்களிடத்தில் வரவேற்பைப் பெற்றுள்ளது அதிகமாக தென்னிலங்கையிலிருந்து வருபவர்களிடத்தில் இவை கிறாக்கியாக விலைப்படுகின்றன.

இன்னும் பல கற்பகங்கள் சுற்றுலாத்தலங்களுக்கு அண்மித்த இடங்களில் ஆரம்பிக்கப்படுதல் அவசியமானதாகும். இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை என்பதுபோல நாம் அருகிலுள்ள பனையை பராமரிக்க தவறிவருகிறோம். நூறு பனைகள் தொடர்ந்திருக்கும் ஓரிடம் பெரிய அடர்ந்த காட்டைப் போன்ற பலமான பிரதேசமாகும். பனங்காடுகளுடன் கூடிய சூழலை உருவாக்கி தற்சார்புப் பொருளாதாரத்தில் வெற்றி கொள்ளக்கூடிய சமுதாயத்தை நோக்கி பயணிப்போம்.

**பனை அழிவு பற்றிய விழிப்புணர்விற்காகவும், பனையின் பயன்களையும் மகத்துவத்தையும் இளஞ் சமுதாயத்திற்கு எடுத்துச்செல்லவும், பனை வளர்ப்பின் முதற்கட்டமாகவும் வவுனியா சுயாதீன இளைஞர்களால் கடந்த திங்கட்கிழமை (07.05.2018) ஒழுங்கமைக்கப்பட்டவாறு மன்னார் கட்டைக்காட்டில் நுங்குத்திருவிழா கொண்டாடப்பட்டது. இதன்போது நூற்றியம்பதிற்கு மேற்பட்ட நுங்குகள் இளைஞர்களால் உறுஞ்சிக்குடிக்கப்பட்டது. குடிக்கப்பட்ட நுங்குகளால் உருவாகாமற் போன பனைகளுக்கு பதிலீடாக புதிய பனைமரங்களை உருவாக்கும் திட்டம் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**பனை அதை விதை**
**தனுஷன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே கொண்டாட்டமே எனது மதம்



"ஒரே ஒருமுறை...
நிச்சயமாக,
உன்னால் மௌனமாக இருக்கமுடியும்
என்று, நீ தெரிந்து கொண்டால்...
உன் முழுக் கவனமும் மாறிவிடும்...
இது ஒன்றும்,
ஒழுக்கம் பற்றிய கேள்வியல்ல...
அதற்கு ஒன்றும் பிரார்த்தனை
கட்டாயமல்ல
கடவுளை நம்பவேண்டும் என்ற
கட்டாயமும் இல்லை...
அது போல எந்த வகையான
முட்டாள்தனமும் அவசியமில்லை...
உனது சாத்தியகூற்றை...
நீ உணர்வதைப் பற்றிய கேள்விதான் அது..
அந்த சாத்தியக்கூற்றை
தெரிந்து கொண்டு...
நீ மிகவும் தைரியமாக முயற்சித்தால்...
உன் பார்வையில்...
முழு சமயக் கருத்துகளும்
மாறுபட்ட நிறத்தில் தெரியும்.
"மௌனம்" அறியாததின்
கதவைத் திறக்கும் மிக முக்கிய சாவி...

**வாழ்வை மகிழ்வாக
எடுத்துக்கொள்,
எளிதாக எடுத்துக்கொள்,
தளர்வானதாக
எடுத்துக்கொள்,
தேவையில்லாத
பிரச்சினைகள் எதையும்
செய்து கொள்ளாதே.**

நீங்கள் படிப்பது வெறும் தத்துவ ஞானம். உங்களுக்கு சுத்தப் பைத்தியம். தத்துவஞானம் படிக்க இதுவா பருவம்? வெளியே போய்க் காதலிக்க வேண்டிய வயது. தத்துவ ஞானம் கிழவர்களுக்கானது. ஒன்றுமே செய்ய முடியாத காலத்தில் படிப்பது. அப்போது வேண்டுமானால் படித்துக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் கூறுகிறார்! சுவாசம்தான் உங்கள் வாழ்க்கை. நீங்கள் முழுமையாக சுவாசிக்காவிட்டால் முழுமையாக வாழமுடியாது. ஆனால் மக்கள் சுவாசத்தின் மீது எந்த கவனமும் செலுத்துவதில்லை, உங்கள் உணர்ச்சிகளுக்கு ஏற்ப சுவாசம் மாறுபடுகிறது. நீங்கள் இருப்புணர்வில் இருக்கும் போது நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது, திடீரென்று சுவாசம் நின்று விடுகிறது. நீங்கள் அச்சத்தில் இருக்கும் போது நீங்கள் அதிசய உணர்வில் இருக்கும் போதும் சுவாசம் நிற்கிறது. இவைகள் தான் வாழ்க்கையின் மிகச் சிறந்த தருணங்கள். அப்போது நீங்கள் கடவுளுக்குள்ளும் கடவுள் உங்களுக்குள்ளும் இருக்கிறார். உங்கள் உணர்ச்சிகளோடு சுவாசம் மாறுவதையும். சுவாசத்தோடு உங்கள் உணர்ச்சிகள் மாறுவதையும் கவனியுங்கள். எப்படி உங்கள் உணர்ச்சிகள் சுவாசத்தை மாற்றுகிறது என்பதைக் கவனியுங்கள். யோகாவில் தந்த்ராவில் தாவோவில் சுவாசம்தான் பிரதான நிகழ்வு. உங்கள் சுவாசத்தை அப்படியே கவனியுங்கள். அதை மாற்றாமல் அப்படியே கவனியுங்கள். நீங்கள் அதிகமாக கவனிக்கும் போது நீங்கள் குறைவாக சுவாசிப்பீர்கள் அந்த சுவாசம் நீண்டதாக ஆழமானதாக இருக்கும். நீங்கள் கவனிப்பவராக ஆகும் போது சுவாசம் ஆழமாகும். நீங்கள் ஆழமாக நீண்டு சுவாசிக்கும் போது திடீரென்று ஒரு கவனிப்புத் தன்மை உங்களுக்குள் எழுவதைப் பார்க்கலாம்.

நீங்கள் தெய்வீகத்தை எங்கும் தேடி ஓடி கண்டு பிடிக்க முடியாது. நீங்கள் அப்படியே அசையாமல் நின்று விட்ட பிறகே தெய்வீகத்தை அடைய முடியும். உங்களுக்கு துன்பம் ஏற்பட்டால் சும்மா அப்படியே உட்கார்ந்து துன்பத்தை கவனியுங்கள். அதனுடன் அடையாளப்பட்டு விடாதீர்கள், மகிழ்ச்சியையும் அப்படியே கவனியுங்கள். அதனுடன் அடையாளப்படுத்திக் கொள்ளாதீர்கள். நீங்கள்தான் கவனிப்பவர் நீங்கள் தான் சாட்சி என்று அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் விழிப்புணர்வோடு எதைச் செய்தாலும் அது சரியானதாகவே இருக்கும். நீங்கள் விழிப்புணர்வுடன் எந்த தவறையும் செய்ய முடியாது. அன்புடன் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அன்பு இல்லாத வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை. அன்பும் விழிப்புணர்வும் நோய் நீக்கும் செயல்பாடுகளாகும். கள்ளம் கபடமற்று இருங்கள். கடவுளை அடைய அது ஏதுவாய் இருக்கும். கடவுளை நீங்கள் அறிந்த கொண்ட பிறகு நம்புவதற்கு என்று ஒன்றும் இல்லை. பொய்யான நம்பிக்கைகளினால் மனிதர்கள் பிளவு பட்டுக் கிடக்கிறார்கள். நீங்கள் யார் என்று முதலில் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு கடவுள் என்பவர் யார் என்பது உங்களுக்கு தெரிந்து விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருளானந்

# மருங்காடும்
# மருங்காதலும்

மௌனமான காடுகளிடம்
கதறியழுவோம். துயரங்களே
வாழ்வின் எல்லையென்றில்லை
கொஞ்சம் கொஞ்சம்
கொண்டாட்டங்களின்
மறுதுருவங்கள் மலர்வதை
நினைத்து உருகுதல் வரம்.

வா காடுகளின் பாதங்களை நனைப்போம். ஏன் நீண்ட நேரமாக மௌனமாக இருக்கிறாய் என்றாள்.

காடுகள் ஏன் காடுகளாக இருப்பதில்லை, காடுகளிடம் சரணடைகையில் மௌனங்களின் மொழி இசையாவதால் மௌனமாக இருக்கிறேன் என்றேன். குழந்தையைப் போல சிரித்துக்கொண்டே நெருங்கி வந்தாள். நிர்வாணமான மரங்கள் வெட்கப்படத் தொடங்கின.

காடுகளுக்கு காமம் புதிதல்ல. விலங்குகளின் பரவசங்கள் எங்கேனும் நிகழ்ந்திருக்க கூடுமென மொழிபெயர்க்க எனக்கு வார்த்தைகள் வருவதற்கு முன்
பாய்ந்து என்னை இறுக்கியணைத்துக்கொண்டாள்.

ஓ தேன் காடே.

என்னை வேட்டையாடுகிறாள் இந்த மங்கை, மழைகளை வரவழைத்து என்னை இங்கிருந்து தப்பிக்கவை. இல்லையேல் இன்னொரு உயிர் உதிர்ப்பதற்கு உடந்தையாகிவிடுவாய்.

தலைமுதல் கால் வரை அவள் உதட்டு உரசல்களுக்கு மயங்கிப்போனேன்.

என் உச்சத்தை நோக்கி பறக்கையில் மரக்கிளைகள் இசைத்தன.

நான் முத்தயிசையில் மூழ்கினேன். அவள் முத்தமே இசையாக மூழ்கினாள்.

மழை, காற்று, இசை, மரம் எல்லா இயற்கைகளும் உற்சாகத்தை அள்ளி இறைத்தது.

நாங்கள் சித்தம் கலங்கிப்போனோம். முத்தமும் கலங்கிப்போனது. காடுகளின் இசைக்கும் பறவைகளின் காவலுக்கும் மரங்களின் காற்றுக்கும் நன்றி சொல்லென்றேன்.

மறுநாள் வரும்போது உன் பாதங்களில் மண்டியிட்டு காடுகளிடமும் காதலனிடமும் நன்றி சொல்கிறேன் என்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்

## 1. உஸ்தாத் வால்ட் விட்மன்

நான் எவ்வாறு இருக்கவேண்டுமோ
அவ்வாறே இருக்கிறேன்.
இது எனக்கு போதுமானது.
உலகில் உள்ள எந்த ஒரு மனிதனும்
என்னை அறியாவிட்டாலும் கூட
திருப்தியுடனேயே அமர்வேன்.
அறிந்தாலும் கூட
அவ்வாறுதான் இருப்பேன்.

## 2. சார்த்தர்

இயற்பொருட்கள் தம் இயல்பில்
இருக்கின்றன.
மனிதன் தனக்காக இருக்கிறான்.
அவன் கடவுள்போல் இல்லை,
ஆனால் படைப்பதற்குப் போதுமான
கற்பனையுடன் இருக்கிறான்.

## 3. பிளேட்டோ

இயற்கையில் உள்ள எல்லாமே
நிலையானவற்றின் நிழல்கள்.
மனிதர்களில் பலரும் நிழல்களில்
திருப்தி அடைகிறார்கள்.
அவர்கள் குகைமனிதர்களைப்
போன்றவர்கள்.
குகையை விட்டு வெளியேறி நிழல்
வீழக் காரணமான சூரியனைக்
காணத் துணிவாரில்லை.

## 4. ஜோர்ஜ் பெர்க்ளி

நாம் யார்?
ரத்தமும் சதையுமா?
அல்லது அறிவுணர்வு மட்டுமா?
எப்படி நாம் பார்க்கிறோமோ
அப்படித்தான் அமைகிறது உலகம்.
பார்ப்பதால் அல்லது உணர்வதால்
மட்டுமே உணவாகின்றன பொருட்கள்.

## 5. ஓரான் பாமுக்

மகிழ்வுடன் இருக்க தினமும் குறிப்பிட்டளவு
இலக்கியத்தை நான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது.
இந்த வகையில் தினமும் தேக்கரண்டியளவு
மருந்து உட்கொள்ளும் நோயாளிக்கும்
எனக்கும் வித்தியாசம் இல்லை. என்னளவில்
இலக்கியம் ஒரு மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஜெயகாந்தன்

எந்த ஒரு புதுமையான காரியமும்
தவறுகளோ குறைகளோ இல்லாமல்
இதுவரை உலகத்தில் நிகழ்ந்ததில்லை.
அந்தச் சாதனை நிகழும்போது
அதிலுள்ள குறைகளைப் பற்றி
மட்டுமே எதிரிகள் பிரலாபிக்கிறார்கள்
மற்றவர்கள் அதன் புகழையே
பாடுகிறார்கள்.

## 10. ஹொரேஸ்

புகைக்கூண்டைச் சுத்தம் செய்யப்
போகிறவன் வெற்றியடைந்தானா
தோல்வியடைந்தானா என்பதைவிட
நிச்சயமானது, அவன் கரி
பூசப்படுவான் என்பதே.

## 8. அகிலன்

எழுத்தாளர்கள்
சமூகத்தைத் திருத்துவதற்காக
எழுதுவதாகச் சொல்கிறார்கள்,
உண்மையில் திருத்தப்பட வேண்டிய
நிலைமையில் இருப்பது சமூகமல்ல...
சில எழுத்தாளர்களே.

## 7. லுப்னா, ஹசேன்

மகிழ்ச்சியான தருணங்களும்,
துயர நிகழ்ச்சிகளும் எல்லோருக்கும்
ஒரே மாதிரியானவையாக வருவதில்லைதான்.
ஒரே நபருக்குக் கூட இவை
மாறுபடுவதுண்டு.
மற்றவர் வாழ்க்கை அனுபவங்களும்
வித்தியாசம் வித்தியாசமானவைதான்.
ஆனால் எல்லா
மனிதர்களுடைய சுகதுக்கங்களுக்கும்
பொதுவான ஓர் இழை இருக்கிறது.
அந்த இழையை உணரச் செய்யும்
எழுத்துக்கள் வாசகன் மனதில்
பதிந்து வெற்றி பெற்று விடுகின்றன.

## 9. ஓரான் பாமுக்

ஓர் எழுத்தாளனின் அரசியல்
அவன் கற்பனையிலிருந்தும் வேறு
யாரோவாகத் தன்னை உருவாக்கிக்
கொள்ளும் திறனிலிருந்தும் எழுகிறது.
இந்த பலமே தமக்காக வாதிட
முடியாதவர்களின், யாரும் கேட்க முன்வராத
சோகங்களைக் கொண்டிருப்பவர்களின்
குரலாக எழுத்தாளனை ஆக்குகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சே ரா

# அந்நியன்

அந்நியப்பட்டிருத்தலில் தான் எத்தனை சுகம் எல்லாவற்றில் இருந்தும் எல்லாரிடம் இருந்தும் விலகி நின்று அவர்களை வேடிக்கை பார்த்தபடி வாழ்நாளை கடத்துவதை மிஞ்சும் வேறென்ன இவ்வுலகில் இருந்து விடப் போகிறது. அவ் உணர்வு நான் ராஜா என்பதற்கு ஒப்பான ஒன்றாகும். என்னை கேள்வி கேட்கவும், கட்டுப்படுத்தவும், அடி பணிய வைக்கவும் யாரும் இல்லை என்று கூறுவதில் தானே நான் முழுதும் எனக்கு பிடித்த மாதிரி இருக்கிறேன் என்பதின் உள் அர்த்தம் புதைந்து கிடக்கிறது.

ஒரு மனிதனுக்கு இவ்வளவு சுயநலம் கூடாது என்று நீங்கள் எண்ணினால் அது தவறு. அந்நியப்பட்டிருத்தல் என்பது சுயநலமாக இருக்கிறேன் என்பது அல்ல. ஒருவன் அவனது சிந்தனைகளையும்,கனவுகளையும் சிதைக்கும் காரணிகளிடம் இருந்து அல்லது அவனுக்கு ஒவ்வாத சிலவைகளிடம் இருந்து சற்றே விலகி இருக்கிறான் என்பதே இதன் பொருள்.

இச்சமூகத்தில் நாம் இருவகையான அந்நியர்களை காணலாம் விரும்பி அந்நியப்பட்டிருப்பவர்கள் அதாவது ஏதோ ஒரு இலக்கு வைத்து அதை அடைய அதை நோக்கிய பயணத்திற்கு தேவையில்லா சிலவைகளை சிலர் விரும்பியே விலகி இருப்பார்கள். இரண்டாவது வகை இச்சமூகத்தால் அந்நியப்படுத்தப்பட்டவர்கள். நாம் பேச வேண்டியது இவ் இரண்டாவது வகையை பற்றி தான்.

எனக்கு அவ்வகையை சேர்ந்த ஒரு அந்நியனை தெரியும், மிகவும் வித்தியாசமானவர். பெரும்பாலும் மனிதர்களிடம் இருந்து அந்நியப்பட்டே இருப்பார். மலைகளை காதலியாக்கி கொண்டார், நிலவோடு ஊடல் புரிவார், கடலோடு கதைத்து கொண்டிருப்பார். இப்படியான சில கற்பனை உலகில் வாழ்கிறார். நமக்கு தான் அது கற்பனை ஆனால் அவரை பொருத்தவரை அது கற்பனை அல்ல அவர் நம்பும் நிஜம். அவர் உண்மையாகவே மலைகளை காதலித்து, நிலவோடு ஊடல் புரிந்து, கடலோடு கதைத்து கொண்டு தான் இருக்கிறார். அவர் அதை உண்மை என்றும் உறுதியாக நம்புகிறார்.

எப்போது ஒரு அந்நியன் உருவாகிறான். இச்சமூகத்தால் தொடர்ந்து ஒருவனை ஏமாற்றும் போது அவன் உணர்வுகளை சீண்டி பார்த்து சிரிக்கும் போது என எப்போது இச்சமூகத்தல் வாழும் மனிதர்கள் மீது ஒருவன் முழுதும் நம்பிக்கையற்று போகிறானோ அந்த தருவாயில் தான் அந்நியன் பிறக்கிறான். ஒருவகையில் நீங்கள் பைத்தியம் என்று கூறும் அந்நியன்கள் உங்களை போன்று யாரோ ஒருவர் உருவாக்கிவிட்டு சென்றவர்களாக இருக்கலாம். அதற்கு முன் அவர்களும் உங்களை போலத்தான் நண்பர்கள் சூழ வாழ்ந்திருப்பார்கள். சிரிக்கும் செயல் முறையை கூட மறந்த அவர்கள் புன்னகை மாறா முகத்தோடு இவ்வுலகை வலம் வந்தவர்களாக இருக்கலாம். மனிதர்களாகிய நாம் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மோட உலாவித் திரிந்த சக மனிதனை அந்நியன் ஆக்கி அந்நியப்பட்டிருக்கும் அவனுக்கு பைத்தியம் பட்டத்தையும் சூட்டி விடுகிறோம்.

அந்நியன்கள் தனிமையில் இருப்பதால் அவர்கள் அனைவரையும் தனிமை விரும்பிகள் என்று பொதுமைப்படுத்திவிட இயலாது. அவர்களில் பலருக்கு அன்பு வேண்டும், காதல் வேண்டும் கட்டியணைத்து தூங்க ஒரு காதலி வேண்டும். தலை கொட்டி தவறை உணர்த்த ஏதோ ஓர் உறவு வேண்டும் ஆனால் அவர்களுக்கு பயம் மீண்டும் ஓர் ஏமாற்றத்திற்கு அவர்கள் தயாராக இல்லை.

அந்நியன்கள் அன்பு மிகுதியானவர்கள் கட்டுப்பாடுகளற்ற காதலை கொடுக்க கூடியவர்கள். அந்த காதல் அவர்களை ஏமாற்றும் தருவாயில் அதை ஜீரணிக்க முடியா மன நிலையில் தன்னை தானே மற்ற எல்லாவற்றிடம் இருந்தும் விலக்கி கொள்கிறார்கள். ஏனெனில் மீண்டும் ஓர் முறை இவ்வலியை அனுபவிக்க விளக்கம் தர இயலா பயம் அவர்களுக்கு.

அவர்கள் குழப்பவாதிகளும் கூட ஒருபோதும் தான் தனிமையில் இருப்பதாக ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். தலையணை, புத்தகம், இசை, தேநீர் என இவை அனைத்தும் என்னுடன் இருக்கின்றன என்று அவர்கள் நம்பும் ஓர் விஷயத்தை நமக்கு எடுத்துரைப்பார்கள்.

அவர்களுக்கு வாழ்க்கையினை பற்றிய பயம் அவ்வளவாக இருப்பதில்லை. அவர்களிடம் அடுத்து என்ன? என்ற திட்டமிடுதல் இருப்பதில்லை. வாழ்க்கையை அதன் போக்கிற்க்கு போக விட்டு அதனோடு இணைந்து வாழ்வார்கள். அதற்குள்ளாக எந்த மாற்றத்தையும் கொண்டு வர அவர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் உயிரோடு இருத்தலை பற்றிய பெரிய அபிப்பிராயங்கள் ஒன்றும் அவர்களுக்கு இருப்பதாக தோன்றவில்லை.

நீங்கள் அவர்களை தொந்தரவு ஏதும் செய்யாதீர்கள். அவர்களை உங்களோடு இணைத்து வைத்துக்கொள்ள முயலாதீர்கள். அந்நபர்களின் இயல்பினை சிதைத்து உங்களோடு சேர்ந்து வாழச்சொல்வது வன்கொடுமைகளின் ஒரு வகை. அவர்களுக்கு நீங்கள் தேவையற்றவர்கள் ஆகவே நீங்கள் அவர்களை விட்டு ஒதுங்கி நின்று அவர்களுடைய வாழ்க்கையை வேடிக்கை பாருங்கள்.

அவ் மனிதர்களிடம் ஒரு பெரும் தேடல் இருக்கிறது. அவர்கள் தனக்கு பிடிபடாத இவ்வுலகத்தை புரிந்து கொள்ள முயற்சித்து கொண்டே இருப்பார்கள். ஏனெனில் பெரும் கலைஞர்கள் அந்த கூட்டத்திற்குள் இருந்து வந்தவர்கள். அக் கூட்டத்திற்கு சிறந்த கலைஞனை உருவாக்கும் வித்தை தெரிந்திருக்கிறது. என்னை கேட்டால் அந்த பித்தன்களை அப்படியே விட்டு விடுங்கள் அவர்கள் தான் உங்கள் தனிமையை நிரப்பும் இசையையோ, புத்தகத்தையோ அல்லது வேறு ஏதோ ஒரு கலை வடிவத்தையோ உங்களுக்காக தர இருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூ
ஞ்
சி
ப் புத்தகத்திலிருந்து...!

# வெளி



தேவைக்காக யார் பழகுறாங்களோ அவங்க விரிச்ச வலைல
காதல்ன்னு நம்பி போயி விழுந்து குய்யோ முய்யோன்னு
புலம்பறதுதான் இவிங்க பண்பாடு.. இதுகதான்
பொண்ணுன்னாலே ஏமாத்துவா.. ஆம்பளன்னாலே
பொறுக்கிப்பயன்னு சொல்லிக்கிட்டு இருக்கும்க.. சரியான ஆளை
தேர்ந்தெடுக்கற வரை இந்த குழப்பம் இருக்கத்தான் செய்யும்

**Meenamma kayal**



நிறைய நட்சத்திரங்களைப்
பார்ப்பதற்கு நிறைய
இருட்டையும் பார்க்கவேண்டியது ஆகிறது.
வண்ணதாசன்

**Dhadsa raj**



கோவமா இருக்கேன்னு சொல்விட்டு
குட்நைட் சொல்றதுக்கு பேர் தான்
அன்பு

**Arul ananth**



சாதி சாதினு கத்திரியே சாதியாடா ஒன்ன பெத்திச்சு..
உங்க ஆத்தாடா... இப்பிடி கோவமா கேப்டன்
எந்த படத்தில பேசுனாரு..
டெம்பிளேட் எடுக்கனும்..

**Angelo AE Kisho**

# வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் எப்படியிருக்க வேண்டும்?

காலையில் குளிப்பதற்கு முன்னே பார்த்து முடித்துவிட்ட பத்திரிகையின் மொத்த எழுத்துக்களும் பரப்பிக் கொண்டிருந்த வன்மத்தை ஒரே நொடியில் கிழித்துப்போட்டு விட்டதில் முடிக்கப்பட்டது என் எழுச்சி. தேநீர் கோப்பையில் இதழேறிய ஒற்றைக் கசைப்பை முகமேற்றி கோப்பையைத் துண்டுகளாய் ஆக்கிவிட்டதில் ஆற்றப்பட்டேன். இடையோடு ஒட்டிநிற்காத ஒரே காரணத்திற்காய் கசக்கிப்போட்ட அந்தச் சட்டையின் மேல்பொத்தான் அறுந்து விழுகையிலும் ஆர்பரித்துக் கொண்டேன்.

தட்டிலிருந்த பாண் கொஞ்சம் கறுத்திருந்து என்று தள்ளிவிட்டுச் சென்றபோதும் நிசப்தமாய் ஆற்றப்பட்டேன். தீர்ப்பதில் தீர்ந்துபோயிருக்க பழக்கப்படுத்தப்பட்டிருந்தேன். சிக்னலைக்கடந்து செல்லக் கிடைத்த கடைசி நொடிச்சந்தர்ப்பத்தில் ஒளிர்விக்கப்பட்ட சிவப்பு விளக்கு அடக்கமுடியாத கோபத்தைக் கிளறிவிட்டிருந்து எனக்கு.

நெருங்கும் முன்னே மூடிவிட்ட

மின்தூக்கியினை இயக்கிக் கொண்டிருந்தவனை அடித்துப்போடும் அளவு எல்லை மீறியிருந்தேன். ஒவ்வொரு முறையும் என்னை உருவேற்றிக் கொண்டிருந்த சேவகனை வெளியேற்றிவிட கட்டளையிடும் அளவு கறுத்துவிட்டேன். அழைத்தபோது பதிலளிக்காத கைபேசிக்காரர்கள் ஆயிரம் அழைப்பெடுத்தும் பதில்கொடுக்காத திருப்தியில் ஓலமிட கற்றுக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவையெல்லாம் எனக்கு அயர்வைத் தந்தது. என்னை ஏன் இதற்கெல்லாம் பழக்கப்படுத்துகின்றீர்கள். நான் உலகின் அத்தனை அன்பையும் தேக்கிவைக்கவும், மிச்சமில்லாமல் ஒட்டுமொத்த அழகை அள்ளிப் பருகவும் ஆசைப்படுகின்றேன். ஒருமுறை என்னை மீட்டெடுத்து பாருங்களேன். நான் என்னவெல்லாம் செய்வேன் தெரியுமா? வனாந்திரங்களில் அலைய ஆசைப்படும் என்னை ஏன் இந்த கூட்டுக்குள் அடைத்து வேடிக்கை பார்க்கின்றீர்கள்? என்னை உங்கள் கூட்டுக்குள்ளேனும் பரவாயில்லை, சுதந்திரமாய் அலையவிட்டுப்பாருங்களேன் நான் என்னவெல்லாம் செய்துவிடுவேன் தெரியுமா?

நீ எப்படியிருந்திருப்பாயென்று தெரியுமா?

காலை பத்திரிகை சொன்ன அந்த வன்புணர்வுச் செய்தியின் வக்கிரத்தை சிறுமியொருத்தியை கிடைக்கும் இடங்களிலெல்லாம் தடவிக்கொண்டிருந்த அவள் மாமாவிடமிருந்து பிரித்தெடுத்து தாய்க்கு அறிவுறுத்துகையில் துளிர்த்துப் போயிருப்பாய். முன்னிருக்கையில் இருந்தவனின் அத்து மீறலில் எதிர் இருக்கையில் அவள் அயர்ந்து பார்த்த பார்வையில் ஆண்மை கட்டுடைத்து அவன் கன்னம் தொட்டிறங்கிய கைகள் எரிவதற்கு பதிலாய் குளிர்ந்ததைக்கண்டு தாய்மை உணர்ந்திருப்பாய். இன்னுமொரு ஆணை அவள் நம்புவதற்கான கடைசி ஆணாயேனும் இருந்திருப்பாய். அம்மாவின் அயர்வை உணர்ந்த மதிய உணவு உப்பில்லாமலும் சுவையேறியிருப்பதைக் கண்டிருப்பாய். கிடைத்த கண நேரத்தில் யன்னலை மீறி விழுந்த பார்வையில் சமிஞ்சைகளுக்கு கட்டுப்பட்ட வாகனங்களை ரசித்திருப்பாய். தேநீர் கோப்பையோடு வந்து கதவு திறக்கத் தடுமாறும் அலுவலக ஊழியனுக்கு உதவிய-தில் கிடைத்த புன்னகையில் அத்தனை அழகையும் உணர்ந்திருப்பாய்.

மாலை நேரத்தின் மழை ஓய்திருந்த பொழுதொன்றில் ஒரு கோப்பை நிறையத் தேநீரை நிறைத்துக் கொண்டு யன்னலோரத்தில் இருந்த சாய்மனைக் கதிரயில் அமரச் சொன்னேன். மாலைவெயிலின் சந்தனக் குளியல் தந்த மஞ்சள் வெளிச்சத்தில் கருந்தார் வீதியெல்லாம் நீர்தெளித்து அழகாய் மின்னிக் கொண்டிருப்பதையும் அனுபவிப்பாய். உப்பரிகையினைக் கடக்கையில் தேகம் தாண்டிச்சென்ற காற்றொன்று விட்டுச் சென்ற சிலிர்பை மேலும் மேலும் வேண்டுமென்று அடம்பிடிக்கத் தொடங்கும் உன் தேகம். அத்தனை அசைவையும் மென்றுக் கொண்டிருக்கையில் கடந்து போன ஒரு வாகனத்தில் அதிஉயர் சத்தத்தில் ஒலித்துச்சென்ற பாடலொன்றை மீண்டும் கேட்க காதுகளும் முணுமுணுத்து நிற்க உதடுகளும் அடம்பிடித்துக் கொண்டிருக்கும். ஆனால் அத்தனை ஆழ்மன தூண்டல்களையும் கொஞ்சமும் தீண்டவிடாதபடி விரட்டியடித்துக் கொண்டிருக்கிறாய் நீ. கொஞ்சம் என்னை அனுமதி உன்னில். நான் யாரென்பதை சொல்லப்போவதில்லை. ஆனால் என்னை நீ அறிந்திராமலும் இல்லை.

காலையிலிருந்து கடந்து வந்த என்னையும் இந்த நிமிடத்து என்னையும் சீர்தூக்கி பார்க்கவேண்டும். ஆனால் அப்படி பார்ப்பதென்பது அத்தனை இலகுவான தொன்றாக இருந்துவிடாது. முன்கண்ட நாலும் மெய்யே பின் கண்ட நாலும் மெய்யே. ஏதோ ஒரு என்னில் மட்டுமே பிரியப்படக் கூடும் நீ நான் எப்படி இருக்க வேண்டும் என்பதைத தீர்மானிப்பதும் நீயாகத்தானிருக்க வேண்டும். உன்னால் உறங்கிக் கிடந்த என்னை விழிக்கச் செய்வதும் உன்னால் மட்டுமே முடியும். நீ உறங்கும் பின்னிரவொன்றில் உன்னுள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் அந்த ஒன்றைக் கேட்டுப்பார் அதன் பதில் நானாய் இருப்பேன்.

**பிரதீபா குலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் இலக்கியம்


நிமிடத்திற்கு ஒரு தரம் முகநூலில் பதிவிடுவதும் சர்ச்சைகளில் இணைந்து பரபரப்பாவதுமாக எழுத்தாளர்கள் பலர் முனைப்புடன் இருக்கையில் தங்கள் செயல்பாடுகள் மிக அமைதியானதாக உள்ளது. என்றாவது இந்தப் பெரும் அலைகளில்நாம் காணாமல் போய்விடுவோம் எனும் பதற்றம் வந்ததுண்டா?

**சு.வேணுகோபால்:**

*ஒருபோதும் இல்லை. முகநூல் முகநூல் என்கிறார்களே அதில் என்னதான் நடக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டேன். நான் பணியாற்றும் கல்லூரி முதல்வரின் நிர்பந்தத்தினால் சென்ற மாதம் முகநூலுக்கு வந்தேன். வாட்சப், முகநூல் வழி மாணவர்களுக்கு உடனுக்குடன் தகவலைத் தரவும் பெறவும் அடுத்தடுத்த பணித்திட்டங்களை உடனுக்குடன் பெறவும்-செய்யவும் இந்த ஊடகவெளிக்குள் வரநேர்ந்துள்ளது. வெளிபேச்சு உருவாக்கி இருந்த பிரமிப்பு கலந்த மயக்கம் இரண்டு மூன்று நாட்களிலேயே கலைந்துவிட்டது. பின் மூன்றே நாட்களில் என் புகைப்படத்தை மறைந்தேன்.*

*முகநூலில் தொடர்ந்து பதிவிடுவதால் நம் பெயர் அடிபட்டுக்கொண்டே இருக்கும். இலக்கியம் செய்ய முடியாது. இலக்கியம் குறித்த நிகழ்வுகளை சிறு சிறு சர்ச்சைகளை அன்றாட நிகழ்வுகளை தெரிந்து கொள்ளலாம். எனக்குக் கடந்த ஒரு மாதமாக ஒரு பதற்றம் தொற்றிக்கொண்டது. என்றைக்கு இந்த முகநூலிலிருந்து வெளியேறுவது என்பதுதான். இந்த அலையில் விளையாடத் தொடங்கினால் பெரிய காரியங்கள் செய்யமுடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. வந்த காரியத்தை செய்யாமலே காணாமல் போய்விடுவேன். முகநூல் புகழ் எனக்கு வேண்டாம். அதை விரும்புபவர்களே வைத்துக்கொள்ளட்டும். ஆனால் தகவல்களைப் பெறவும் அனுப்பவும் வசதியாக இருக்கிறது. என் தேர்வு சார்ந்து முகநூலில் இயங்கமுடியாது. நம் படைப்புதான் காலங்காலமாக பேசப்படவேண்டும். இன்றைய பதிவுகளினால் பரபரப்பாக்கிக்கொள்ள விரும்பவில்லை. எவ்வளவோ தகவல்கள் வருகின்றன. சில நல்ல தகவல்களுக்காக விலகி நின்று பார்க்கலாம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீம்ஸ்










# பாஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம்

நா.ஶ்ரீதரன்

பார் எங்கும் பல உயிர்கள் படைப்பில் பிந்திய மனிதனால் அவையனைத்தும் ஆபத்தில். ஆபத்து அவைகளுக்கு மாத்திரம் இல்லை மனிதருக்கும்தான். இந்த பூமி பிறந்து 200 கோடி ஆண்டுகள் உயிர் தோன்றி 3 1/2 கோடி ஆண்டுகள் இவன் தோன்றி வெறும் 35 லட்சம் ஆண்டுகள் தான் எனவே மனிதன் இல்லாமல் 199 கோடி 65 ஆண்டுகள் இருந்த பூமிக்கு அவன் இல்லாமலும் இருக்கமுடியும். தன் இசைவை தக்கவைக்க அது நடந்தாலும் ஒன்றும் அதிசயப்படுவதற்கில்லை.

ஆய்வு அறிஞர் ஸ்டீபன் ஹாக்கிங் தனது ஆய்வு முடிவில் "இப் பூமியானது மனிதன் வாழ்வதற்கு ஏதுவானதாக இல்லை வேறு கிரகங்களை நோக்கி படையெடுங்கள்" என்று அறைகூவுகின்றார்.பிரான்ஸிய மண்ணியல் ஆய்வு அறிஞர் கிளாட் பூரிங் " உலக பிள்ளைகளே நம்பூமித்தாய் மரணபடுக்கையில் கிடக்கிறாள் 18 வயதிலே நம் தாய் பாட்டியாகி விட்டாள் "என்கிறார் நம்தாய் கன்னிகழியாமல் இருந்தாள் எப்போது ..? நாம் காடுகளில் வேட்டையாடி திரிந்தபோது.மரங்களில் காய் கனிகளை பறித்து உண்ட போது, ஓடைகளில் நீரை அள்ளி பருகியபோது அவள் நலமாக இருந்தாள்.எப்போது நாம் பணம் பணம் என்று வேட்டையாட தொடங்கினோமோ அன்றே அவள் சாவதற்கு தயாராகிவிட்டாள். எதற்காக இந்த ஓட்டம்.? யாருக்காக இத்தனை வேகம்.? எதுவுமே நிச்சயம் இல்லா வாழ்கையில் பணம் என்ற ஒன்றை எல்லாவற்றையும் அழிக்கிறது. இதுதான் மனிதர்கள் இயல்பு மனிதம் தாண்டி தமிழர் நம் இயல்பு இதுதானா..! அனைத்து இனங்களும் இப்போது மனிதம் பற்றி பேசுகின்றார்கள் ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயிர்மை நேயம் பேசிய இனத்தின் பிள்ளைகள் நாம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று நமது பெரும்பாட்டன் வள்ளுவன் கூறியுள்ளான். மரம் செடிகளுக்கு உயிர் இருக்கின்றது என்று நிறுவுகின்றார் ஓர் விஞ்ஞானி இருபதாம் நூற்றண்டிலே சிறந்த கண்டுபிடிப்பாக அது போற்றப்படுகின்றது. ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்தில் "புல்லும் மரனும் ஓரறிவினதுபிறவும் உளவே அக்கினை பிறதே" என்று நமது மூதாதை தொல்காப்பியர் கூறியுள்ளார். அந்த காலம் தொட்டே தமிழர் நாம் இயற்கையோடு இணைந்து இயற்கையாகவே வாழ்ந்து வந்தோம் எனினும் இடையில் வந்த சில ஊடுருவல்கள் எமது பாரம்பரியத்தை வாழ்வியலை சிதைத்து தமிழர் இருப்பை மாத்திரம் அல்ல ஒட்டுமொத்த உலகையும் அழிக்க முனைகிறது. எப்படியென்றால்.......

அடுத்தவெளியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவாய்ப் போதல்

கிருஸ்ணபெருமாள் கிஷாந்

வார்த்தைகளால் வலியினை வெளிப்படுத்திவிட முடியாது என்ற பெருங்கருத்து உண்டு. ஏறத்தாழ அது உண்மையும்கூட. "பாசத்தினூடாக ஞானம் கொள்ள படைத்தவன் புரிகின்ற சூழ்ச்சி என்ன?" என "அபியும் நானும்" திரைப்படத்தில் வைரமுத்து ஒரு வரியினை எழுதியிருப்பார். உலகின் ஞானமடைதல் நிலையின் பொது நிலைப்பாடு அது. போதிமரங்கள் ஞானத்தை வழங்கிடாது மாறாக புத்தர்கள்தான் பெற்றிடல் வேண்டும். பாசத்திலிருந்து அறுபடலே ஞானநிலை என்பர். அதன் அர்த்தம் பாசம் கொள்ளாதவர்கள் ஞானம் அடைந்தவர்கள் என்பதல்ல. பாசத்தின் உள்ளாக சிக்கி, அதன் அகம் புறம் கண்டு, கொண்டாடி, குதூகலித்து, ஆனந்தக்கூத்தாடி பின்னொரு பொழுதில் அதிலிருந்து விடுபடும்போது, விடுபட வைக்கப்படும்போது ஞானநிலை தோன்றுகிறது. இங்கு விடுபடுபவர்கள் பெரும்பாலும் ஞானிகளாகிவிடுகிறார்கள், விடுபடவைக்கப்படுபவர்கள் பைத்தியமாகிறார்கள். ஆனால், இரண்டும் ஏதோவொரு வகையில் ஞானநிலைதான் என்பதே உண்மை.

உறவுச்சிக்கல்- கூட்டுக்குடும்ப சிதைப்புக்கும், கருக்குடும்ப அமைப்புக்கும் பிரதான காரணமாகச் சொல்லப்படுவது இதுதான். அதுதான் உண்மையும்கூட. ஆனால், இந்த உறவுச்சிக்கல்தான் எத்தனை ஆனந்தமானது என்பதை நான்காம் பரிமாணத்தில் நின்று வெறும் பார்வையாளர்களாகக் காணும்போதுதான் கண்டுகொள்ள முடிகிறது. நாம் வேடம் ஏற்கும் கணத்திலெல்லாம் அது நிஜமாகவே சிக்கலாகிப்போகிறது. சிறுவயதில் ஏறத்தாழ அனைவருமே "அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கச்சி யாருமே எங்களுக்கு முன்னுக்கு செத்திடக்கூடாது. எல்லாரும் ஒண்டாவே எப்பவும் இருக்கோனும்." என்ற எண்ணம் நிச்சயம் இருந்திருக்கும். சிலருடைய பட்டியலில் "தாத்தா, பாட்டி" உம் சேர்ந்திருக்கக்கூடும். இது பதின்மவயது வரையான எண்ணப்பாடாகவே இருந்திருக்கும்.

பின்னதாக குடும்பப்பொறுப்பில் பங்கெடுக்க அண்ணா வெளிநாடு சென்றிருப்பார். போகும்போது 6,7 வருடம் கடினமாக உழைத்துப் பணம்திரட்டிவிட்டு சொந்தநாட்டுக்கு வந்து குடும்பத்தோட இருந்திடோனும் என்பதுதான் ஆரம்ப எண்ணப்பாடாக இருக்கும். வெளிநாடு சென்ற புதிதில் தினம் 3,4 தடவைகள் அழைப்பு தவறாமல் வந்துவிடும். நாள் செல்லச்செல்ல அழைப்பின் அளவு குறைந்துகொள்ளும். வெளிநாட்டு வாழ்க்கை அண்ணனை பூரணமாக உள்வாங்கிக்கொண்டிருக்கும். சொந்த நாடு திரும்புதல் என்பது வெறும் விடுமுறைக்கால சுற்றுலாவாகியிருக்கும்.
அக்கா உயர்கல்விக்காக பிறிதொரு மாவட்டம் சென்றிருப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் வார இறுதிநாட்கள் ஊருக்கான பயணத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். நாட்கள் நகர கல்வி அவரை முழுமையாக ஆட்கொண்டிருக்கும். வீட்டுக்கான வருகை செமஸ்டர் லீவு நாட்களாக மாறிவிடும். ஆரம்பத்தில் வீட்டுக்கு வரும்போது காவிவந்த குதூகலக்கதைகளெல்லாம் இப்போது பயணக்களைப்பு சம்பந்தமானதாய் மாறியிருக்கும். இப்படியாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி அழைக்க குடும்பம் சிறிதுசிறிதாக சுருங்கி ஈற்றில் வீடென்பது ஒரு விடுமுறை விடுதியாய் மாறிப்போயிருக்கும். மனதில் எந்தவித பாரமுமின்றி நாட்கள் சீராக ஓடிக்கொண்டிருக்கும். சிறுவயதில் தோன்றிய அந்த எண்ணம் நினைவில்கூட இராது.

“தீவாய் போதல்” இந்த வார்த்தையினைக் கேட்கும் கணங்களிலெல்லாம் நெஞ்சை ஏதோ ஒன்று மேலிருந்து அழுக்குவது போன்ற ஒரு தோற்றப்பாடு காணப்படும். கண்கள் மூளையின் கட்டுப்பாட்டுக்குள்ளிராமல் தானாகவே கண்ணீர்ச்சுரப்பிக்குத் தந்தியடித்திருக்கும். ஒற்றுமையாயிருத்தல் ஒன்றே ஆரம்ப இலட்சியமாய் இருந்த நாம் ஒவ்வொருவரும் இப்போது ஒவ்வொரு மூலையில்... வெறுமனே வார்த்தைப்பரிமாற்றங்களாக மாறிப்போயிருக்கும் அன்பின் கனதி. நாம் எம்மை அறியாமலே தீவாய் போகின்றோம். தனிமையற்ற பொழுதுகளில் அந்தத்தீவு இரசிக்கும் படியாக இருப்பதாக மாயத்தோற்றம் காட்டும். தனிமைப் பொழுதுகள் அந்தத்தீவிலே மிகக்கொடூரமானவை. இதயத்தைப் பிளந்தெடுத்து ஒவ்வோர் அணுக்களிலும் கிளியோபற்றாவின் ஊசிகளை இறக்கும். அந்த வேதனைக்குப் பயந்தே எம் பொழுதுகளை முடிந்தளவு தனிமையற்றதாக்கிக் கொள்கிறோம்.

இந்தத் தீவாய்ப்போதல் தவிர்க்கமுடியாத ஒன்றாக இந்த உலகமயமாக்கப்பட்ட இயந்திர உலகிலே காணப்படுவது மறக்கமுடியாத ஒன்று. உறவுகள் கூடியிருந்தபோது எமக்குப் பொழுதுபோக்கு சாதனங்கள் தேவைப்படவில்லை மாறாக அறிவை வளர்க்கும் சாதனங்களே தேவைப்பட்டன. நாகரிகமும் தொழிநுட்பமும் வளர வளர என் பொழுதுகளை என் குடும்பத்திடம் இருந்து அவை பறித்துக்கொண்டன. பதினெட்டு வயது வரையிலும் அம்மா அப்பாவிற்கு நடுவில் உறங்கியவன் நான். ஆனால் இப்போது எட்டு வயதில் ப்ரைவேசி கேட்கிறார்கள். என் பாட்டன் தீவாய்ப்போகமலேயே இறந்தான். என் தந்தை ஐம்பது வயதின் பின்னதாக தீவாய்ப்போனான். நான் பதினெட்டு வயதில் தீவாய்ப்போனேன். என் மகன்? அவனின் மகன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்மூர் அதிசயமே

முறிகண்டி லக்சிதரன்

நெட்டை அண்ணன் போல
நெடிது வளர்ந்த பனைமரமே..!!
சுமைகள் நீ சுமந்து
சுகங்கள் காண வைத்தாயே

பலகோடி மக்களின் துணையாய்
பயன் தரும் எம்மரமே...!!
பனைமரம் தரும் பதநீர்
பலர் பெறும் உயிர்நீர்

வறண்ட தேசத்திலும் செழித்தோங்கி
வறியோர்க்கெல்லாம்
வாழ்வு தருவாயே..!!
ஓலைகளால் கூடாரம் அமைத்து
ஓய்வெடுப்பார் வறியோர் இங்கு

சூட்டை தணிக்கும் நுங்கு
தேனாய் இனிக்கும் பனம்பழம்
சோகை மருந்தாய் கருப்பட்டி
அவித்து உண்ண பனங்கிழங்கு
கூறை மேய பனையோலை
கூடி கதைபேச மரநிழலானாய்

வருடம் முழுதும் வற்றாதவளமாய்
வாரி வழங்கும் பனைமரமே....!!!
எம்மூரின் அதிசயமானாய் இங்கு
உனை காப்பது எம்கடமையே...!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளானந்

# பனை அதை விதை

பனை இயற்கையின் இரத்த உறவு. தமிழுக்கும் பனைக்கும் தீரா காதலிருக்கிறது. வன்னியின் தான்தோன்றித்தனமான தாவரத்தை தான்தோன்றித்தனமாக அழிப்பதை வேடிக்கை பார்க்கின்ற சராசரி மனிதனாக இல்லாமல் பனை வளத்தை பரவலாக்க படையுடன் வந்தவர்களே **சுயாதீன தமிழ் இளைஞர்கள். *பனை அதை விதை*** என ஒருபடை பத்தாயிரம் பனை விதைப்பின் பயணத்தை மழை, வெயில், சகதிகளுடன் கடந்து வவுனியாவில் நிகழ்த்தியிருக்கிறது. இளைஞர்கள், சிறுவர்கள், பொதுமக்களுக்கு பனை ஏன் தேவை? என்கிற அனைத்தையும் பனை விதைப்பில் சொல்லியபடியும் முகநூல்களில் பகிரப்பட்டபடியும் பனை விதைப்பு திருவிழாவாக்கப்பட்டபடியும் நகர்கிறது.

**இயற்கையை வழிபடு இயற்கையை கொண்டாடு இயற்கை உனக்கு மழையை, காற்றை, கனிகளை, உணவுகளை, பசுமையை தரும்.** அதன் நோக்கத்தில் உருவான எண்ணக்கருவே பத்தாயிரம் பனை விதைப்பு. சுலபமான காரியமல்ல பத்தாயிரம் பனை விதைப்பு. ஆனால் இயற்கையையும் பனையையும் வெறித்தனமாக நேசிக்கும் உறவுகளுடன் களம் காண்பது என முடிவெடுத்தோம். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பனை விதைகளை விதைத்து மழைத்துளிகளின் ஆசிர்வாதத்துடன் நிறைவு செய்துள்ளோம்.

***<u>பனை விதைப்பு நடைபெற்ற விபரம்</u>***

| | | |
|---|---|---|
| 23.09.2108 | எல்லப்பர்மருதங்குளம் | 200 |
| 23.09.2018 | சாஸ்திரிகூழாங்குளம | 300 |
| 26.09.2018 | வவுனியாகுளக்கட்டு | 110 |
| 29.09.2018 | எல்லப்பர்மருதங்குளம் | 200 |
| 30.09.2018 | தவசிகுளம் | 420 |
| 30.09.2018 | சாஸ்திரிகூழாங்குளம் | 800 |
| 04:10:2014 | கற்பகபுரம். | 1000 |
| 05:10:2018 | மலர்மகள் வி.க. | 1000 |
| 07:10:2018 | லயா கல்லூரி. | 2000 |
| 12:10:2018 | செட்டிகுளம் பிரதேச இளைஞர்கழக சம்மேளனம் | 2500 |
| 24:10:2018 | மறவன்குளம் | 100 |
| 03:11:2018 | தரணிக்குளம் | 1100 |
| 18:12:2018 | பூவரசங்குளம் | 550 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை இலைக்குள் தேள், பூரான், அரணை, ஓணான், பூச்சிகளின் வாழ்விடமாக பனைமரம் விளங்குகிறது. நூறு பனை மரங்கள் ஒரு காட்டிற்கு சமம் என்று இதற்காகவே சொல்கிறார்கள். பனைமரத்தின் இருப்பினை வளர்ப்பதால் சூழல் சமநிலையையும், நீர்வளத்தையும், தற்சார்புபொருளாதாரத்தையும் முன்னோக்கி செல்ல பனைவளம் தேவை. அதுமட்டுமா? பறவைகளின் வீடு பனை.

பறவைகளுக்குள் புதிய வீடுகளில் வாழ்வதற்கு ஆசைப்படாதா ? எத்தனை மரங்களை பறவைகள் உருவாக்கியிருக்கும். அதற்கு நன்றி கடன் செலுத்தும் மனிதனாக நாம் மாறியிருக்கிறோம்.

**பனை என் பண்பாடு**
**பனை என் பணம்**
**பனை என் வளம்**

என இறுமாப்புடன் சொல்ல பனைமரங்கள் தேவை. ஆனால் இந்தக் கவிதையை வாசித்தால் வெறுப்பே மனித சமூகத்தின் மீது மிஞ்சும்.

**"கோடிபனை நிமிர்ந்த நாட்டில்**
**மாடி மனை நிமிர மரம் தறித்தவனே**
**மழையற்றுப் போனதடா மண்**
**நிற்க நிழலற்ற நெடும் பாலையாவதற்கு**
**குற்றமென்ன செய்தாள் எம் தாய்"**

புதுவை இரத்தினதுரை ஐயாவின் ஆதங்கம், கோபமெல்லாம் எங்களிடம் பாய்ச்சபட்டதோ தெரியவில்லை. பனை வளத்தை பெருக்கவேண்டும். தற்சார்பு நோக்கிய பயணத்தை மீளுருவாக்கம் செய்யவேண்டும் என்பதற்காகவும் தொடர்ச்சியாக குழாய்கிணறுகளின் வருகையினால் நிலத்தடி நீரை இழந்து நீருக்கு பிச்சையெடுக்கிற சாபக்கேடு எவ்வளவு துயரமானது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாவட்டம் | பனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 3 500 000 |
| கிளிநொச்சி | 3 500 000 |
| முல்லைத்தீவு | 500 000 |
| மன்னார் | 300 000 |
| வவுனியா | 8 000 |
| திருகோணமலை | 210 000 |
| மட்டக்களப்பு | 80 000 |
| புத்தளம் | 120 000 |
| அம்பாறை | 40 000 |
| அநுராதபுரம் | 40 000 |
| அம்பாந்தோட்டை | 2 000 |
| மொத்தம் | 10 990 000 |

பனைமர புள்ளிவிபரம் 1993 இல் அதன் பின் உயர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா? என்று தெரியவில்லை. பத்தாயிரம் விதைகள் 2018ல் விதைக்கப்பட்டுள்ளது என்பது உறுதி.

பனை எப்படி நீர்வளத்தை தக்கவைக்கிறது என்பதை பனை விதைப்பில் சொல்வதே எங்கள் தொழிலாக இருந்தது. பனை மரத்தின் வேர்தொகுதி நிலத்தை நோக்கி நேராக செல்வதால் நிலத்தடி நீரை சேமித்துவைத்துக் கொள்ளும், அத்தோடு காற்றில் இருக்கிற ஈரத்தன்னையையும் ஊறிஞ்சி வைத்துக்கொள்ளும், வானுயற வளரும் வசந்த காலமாய் பனை தலைநிமிரும்.

யுத்த சூழ்நிலையில் மனிதனை விழுங்கியதை போல பனைகளையும் விழுங்கிவிட்டது. அதன்பின் அபிவிருத்தி நோக்கோடு பனைகள் தறிக்கப்பட்டு, அனுமதிகளின்றி தீயிட்டு எறிக்கப்படுவதும், மரங்களின் தேவையை மனிதனுக்கு உணர்த்துவதையும் எம் சகாக்கள் பனை விதைப்பில் கையாண்டார்கள்.

சான்றுகள் சான்றுகளாகவே போய்விடக்கூடாது. பனையின் பாகங்கள் முழுதுமே பயன்மிக்கது. ஆனால் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு உடலுக்கு கேடான பானங்களையும், உணவுகளையும் உண்கின்ற சமுதாயம் நோயுடனே வாழ்நாளை கழிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனங்களியின் போசனை பெறுமதி


| ஊட்டச்சத்துக்கள் | பனங்களி % |
|---|---|
| புரதம் | 2.78 |
| சீனி | 14.16 |
| நார்ச்சத்து | 0.32 |
| கனியுப்புக்கள் | 4.3 |
| பெக்ரின் | 4.37 |
| அமினோ அமிலம் | 0.32 |
| கரட்டினொயிட்ஸ் | 3.2 mg |
| விற்றமின் சி | 28 |
| கொழுப்பு | 0.21 |

எனவே தோழமைகளே பனை சார்ந்த வாழ்வியலை வாழ்ந்த இனம் நாம். மரபுகளை மறந்து போவதால் மாற்றம் மலராது. பழமை எப்போதும் பரவசமானது. பொருளாதாரத்தின் ஆணிவேர் பனை என்பதை நாம் உணரத்தொடங்குகிற முதல் நொடியிலிருந்து பனை வளத்தை எந்த கொம்பனாலும் அழிக்கமுடியாது. பனை வளர வளர நீர்வளம் பெருகும் எனவே **பனை அதை விதை புதுசரித்திரம் படை நாளை நமதே.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

itGenius®

IT GENIUS HOLDINGS (PVT) LTD

LAPTOP REPAIR

One of The Leading Laptop Accessories & Repair Center in VAVUNIYA.

Call us today & get On-site SERVICE now

077 123 5987 & 077 232 8987

Laptop Spare Parts & Accessories

Fast Track Fault Diagnostic and Estimation

Featured Electronics Test Equipment Lab

Laptop OS Backup & Restore Services

Laptop Sudden Lost Data Recovery Services

We Undertake All Kind of Laptops Repairing & Services

100% Working Chip Level Repairing & UPGrading



Buying All Type of E-Scraps

(Damaged Not Working Computers & Laptops)

THE COMPLETE SOLUTION FOR YOUR SECURITY NEEDS

Vavuniya CCTV.LK

IT GENIUS HOLDINGS (PVT) LTD

Sales, Repairing, Distributing

All Kind Of CCTV Security Cameras,

Home Alert Systems, Solar Systems & Electric Device Configurations.

Our World Brand Partners

HIKVISION alhua TECHNOLOGY

Our Srilanka Brand Partners

HI-VISION® ZIMA HD

#86E,1ST CROSS STREET, VAVUNIYA.

024 222 8987 & 077 597 5987


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகளுக்கான துரித பொதி சேவை..!
ජාත්‍යන්තර සහ දේශීය කුරියර් සේවාව..!

WES
World•Express•Services

# WORLD EXPRESS SERVICES

INTERNATIONAL / LOCAL COURIER SERVICE




எதிர்வரும் பண்டிகை காலங்களை முன்னிட்டு
சிறப்பு விலைச்சலுகைகள்

துரித கதியில் குறைந்த செலவில் உங்கள் உறவினர்
நண்பர்களுக்கு பொருட்களை அனுப்பிடலாம்.

## எமது சேவைகள்

உங்களின் பொதிகளை துரிதமாக உங்கள்
வீட்டிலிருந்தவாறே பெற்றிடலாம்.

எந்தவொரு நாட்டிலும் உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு
3 அல்லது 4 வேலைநாட்களுக்குள் பொதிகளை ஒப்படைத்தல்.

10 கிலோவிற்கு மேற்பட்ட பொருட்களிற்கு விஷேட
விலைக்கழிவுகள்.

தேவை ஏற்படின் உங்கள் பொருட்களை உங்களின் இடங்களிற்கே வந்து
பெற்றுக்கொள்ளப்படும்.

SPECIAL OFFER

Hotline
077 82 01 994
024 49 03 200

No. 180/5, Station Road Vairavapuliyamkulam, Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org